Not for sale

மே - ஜூன் 2019

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## நமது ஆண்டவரின் சிறந்த தீர்க்கதரிசனம்

சீஷரின் கேள்விகள் • முடிவுக்கு முன் நிகழ வேண்டிய காரியங்கள்

வரலாறும் அறிவியலும் • வல்லமை மற்றும் மிகுந்த வல்லமையோடு

அத்தி மரத்தின் உவமை

விசுவாசம் மற்றும் விவேகமுள்ள ஊழியக்காரன் • செயல்முறைப் பாடங்கள்

### நமது ஆண்டவரின் மகத்தான தீர்க்கதரிசனம்

# ஆதியிலே



மத்தேயு 24-25 ல், நம்முடைய ஆண்டவரின் மகத்தான தீர்க்கதரிசனத்தில், யூத யுக அறுவடையிலிருந்து, சுவிசேஷ யுக அறுவடை வரையில், பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு இடையில் உள்ள சம்பவங்கள், முன்னறிவிக்கப்பட்டது. முதலாவது, நம்முடைய நாளுக்கான அறிவுரைகளை கண்டறிவதற்கு, 24-ம் அதிகாரத்தின் ஆறு பகுதிகளை தனித்தனியான கட்டுரைகளின் கீழ் ஆராய்கிறோம். இந்த கட்டுரைகள், யூத யுக முடிவுக்கும், சுவிசேஷ யுக முடிவுக்கும் இடையே உள்ள ஒற்றுமையை குறிப்பிடுகிறது.

இவைகளுக்கு இடையில் உள்ள இணைகளை அல்லது குறிப்பான முரண்பாடுகளை காண்பிப்பதற்கு, மத்தேயு 24ல் உள்ள ஒவ்வொரு பகுதியையும் மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய வசனங்களின் இணையை நெடுவரிசைகளில் காண்பிக்கப்படுகிறது.

(திருத்தப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட மொழிபெயர்ப்பு நுட்பத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.)சாய்வான வார்த்தைகள் மொழிபெயர்ப்பில் வழங்கப்பட்டுள்ள வார்த்தைகளையும் சொல்ல வரும் கருத்துக்களையும் குறிக்கிறது. பெரிய எழுத்துக்கள் தன்னிச்சையானவை. கையெழுத்துப் பிரதிகளில் உள்ள மாறுபாடுகள் அடிக்குறிப்புகளில் காட்டப்பட்டுள்ளன.

கையெழுத்துப் பிரதிகள் உடன்படாதபோது, பொதுவாக மிகவும் நம்பகமானவைகள் முழு அளவு வகைகளில் காட்டப்படுகின்றன : **B ℵ** (வத்திக்கான் 1209 மற்றும் சினாய்டிக்) சிறந்தவை, 892 **Ψ** இன்னும் நல்லது, ஆனால் 33 **Θ A** மட்டுமே நியாமானவை, பெரும்பான்மை கணிசமாக வேறுபடுகிறது மற்றும் இன்னும் நம்பகத்தன்மை குறைவாக உள்ளது. (அலெக்ஸாண்ட்ரியன், **A**, அப்போஸ்தலர் முதல் வெளிப்படுத்துதல் வரை மிகவும் சரியாக உள்ளது. ஆனால் **A** நற்செய்திகளில் மட்டுமே ஓரளவுக்கு சரியானதாக உள்ளது. 892 மற்றும் 33 ஆகியவை 9ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. 3ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்த பாப்பிரஸ் p 75 (கான்ஸ்டன்டைனுக்கு நீண்ட காலத்திற்கு முன்பு) லூக்கா மற்றும் யோவானின் பெரும் பகுதியை உள்ளடக்கியருந்தது மேலும் குறிப்பாக சரியாக இருந்தது)

"சீஷர்களின், கேள்விகள்" (வசனங்கள் 1-3), "யுகத்தின் முடிவுக்கு முன் நடக்கவேண்டிய காரியங்கள்" (4-14), "விரைந்தோடுவதற்கான கட்டளை" (15-28), "வல்லமை மற்றும் மிகுந்த மகிமையோடும்" (29 - 31), "அத்திமரத்தை பற்றிய உவமை" (32-44) மற்றும் "விசுவாசமும் விவேகமுள்ள ஊழியக்காரன்" (45- 51). ஏழாவது கட்டுரை "மத்தேயு 24 ல் இருந்து நடைமுறை பாடங்களை" எண்ணிபார்க்கிறது.

"மூன்று பரோஷியா உவமைகள்", நம்முடைய ஆண்டவரின் திரும்புதலை எதிர்பார்த்திருக்கும் புத்தியுள்ள மற்றும் புத்தியற்ற கன்னிகைகளை பற்றியும், சுவிசேஷ யுகத்தில் பரோஷியாவின் போதுள்ள தாலந்துகளை கணக்கிடுதலையும், பரோஷியாவின் பிற்பகுதியில், கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சியில் செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளைப் பற்றிய விளக்கங்களை அளிக்கிறது.

## மே / ஜூன் 2019, தொகுப்பு 101, எண் 3


**சீஷரின் கேள்விகள்** 2

மத்தேயு 24:1-3 எப்பொழுது ? மற்றும் என்ன அடையாளங்கள் ?

**"முடிவுக்கு" முன் நிகழ வேண்டிய காரியங்கள்** 5

மத்தேயு 24:4-14. சகல ஜாதிகளுக்குள்ளும் ஒரு சாட்சி

**விரைந்தோடுவதற்கான கட்டளை** 9

மத்தேயு 24:15-28. எப்பொழுது, எங்கிருந்து, நாம் விரைந்தோட வேண்டும் ?

**வல்லமை மற்றும் மிகுந்த மகிமையோடு** 15

மத்தேயு 24:29-31. சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் எவ்வாறு தோல்வி அடையும் ?

**அத்தி மரத்தின் உவமை** 19

மத்தேயு 24:32-44 அத்திமரம் ஒரு அடையாளம்

**விசுவாசம் மற்றும் விவேகமுள்ள ஊழியக்காரன்** 23

மத்தேயு 24:45-51. அந்த ஊழியக்காரனை தகுதிப்படுத்தியது என்ன ?

**மத்தேயு 24ம் அதிகாரத்திலுள்ள செயல்முறைப் பாடங்கள்** 27

இவைகளை செய்வீர்களானால் பாக்கியவான்களாக இருப்பீர்கள்

**மூன்று பரோஷியா உவமைகள்** 30

ஞானமுள்ள, தாலந்துகள் மற்றும் வரக்கூடிய செம்மறியாடுகள்

**இன்றைய தீர்க்கதரிசனம்** 33

உலகளாவிய மோதல்கள்

மத்தேயு 24:1-3

# சீஷரின் கேள்விகள்



Todd Alexander

"இவைகள் எப்பொழுது சம்பவிக்கும் ?" (மத்தேயு *24:3*)

ஆலயத்தின் அழிவைப் பற்றி இயேசுவின் தீர்க்கதரிசனத்தை குறித்து மூன்று குறிப்பான கேள்விகளை அவருடைய சீஷர்கள் இயேசுவிடம் கேட்டார்கள். இயேசு நிச்சயமாக அவர்களது ஆர்வத்தையும், அவர்களது மிகுந்த விசுவாசத்தையும் கண்டு மகிழ்ந்தார்! அவர்களின் கேள்விகள் இவ்வாறாக வரிசைப்படுத்தலாம்.

(1) இது எப்பொழுது சம்பவிக்கும்? (15 ம் வசனத்தில் பதில் அளிக்கப்பட்டது), (2) நீர் இங்கிருப்பதை நாங்கள் எப்படி அறிந்துக்கொள்வது? (21ம் வசனத்தில் பதில் அளிக்கப்பட்டது) (3) யுகத்தின் முடிவை நாங்கள் எப்படி அறிந்துக்கொள்வது ? (22 ம் வசனத்தில் பதில் அளிக்கப்பட்டது)

அநேகமாக, இயேசுவின் முதல் வருகை தெளிவற்றதாக இருந்ததினால், சீஷர்கள் இந்த கேள்விகளை விளக்கமாக கேட்டிருக்கலாம். இயேசுவின் முதல் வருகைக்கான அடையாளங்களை புரிந்து கொள்வதற்கு, தீர்க்கதரிசனங்கள் மேலுள்ள விசுவாசம் அவர்களுக்கு தேவைப்பட்டது, ஆனாலும் வெற்றி பெற்ற மேசியாவாக அவர்களின் எதிர்ப்பார்ப்புக்கு அவைகள் ஒத்துப்போகவில்லை. (எடுத்துக்காட்டாக- "அவர் மனுஷரால் அசட்டைப் பண்ணப்பட்டவரும், புறக்கணிக்கப் பட்டவரும்.... அவருடைய ஆத்துமா தன்னைக் குற்ற நிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கும்போது." ஏசாயா 53) இந்த முறை அவர்கள் ஆயத்தமாக இருக்க விரும்பினார்கள்.

இயேசு தம்முடைய இரண்டாம் பிரசன்னத்தை குறித்த, அவர்களின் மூன்று கேள்விகளுக்கும், ஒரே விதமான தீர்க்கதரிசன அடையாளங்களோடு பதில் அளித்தார். விசுவாசத்தின் வழியாக சீஷர்கள் அவைகளை காணும்போது, அந்த அடையாளங்கள், சுவிசேஷ யுகத்தின் முடிவில், ஏழாம் சபையின் போது, அவருடைய வார்த்தைகளின் மேல் விசுவாசமுள்ள அவர்களின் சக சீஷர்களுக்கு மட்டுமே முழுமையாக புரிந்துக்கொள்ள முடியும்.

இந்த கட்டத்தில், இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு சுமார் ஒரு வாரத்திற்கு முன், சிஷர்களின் இயற்கையான விசுவாசம், இயேசுவின் நீதி, அவர் செய்த அற்புதங்கள் மற்றும் அவர்களின் முன்னிலையில் அவர் நிறைவேற்றின பல தீர்க்க தரிசனங்களின் அடிப்படையில் கட்டப்பட்டதாக இருந்தது. அவர்கள் தங்கள் வாழ்க்கைகளை (எல்லாவற்றையும்) இயேசுவிடம் ஒப்படைத்தார்கள். மேலும் அனைத்து மனுக்குலத்தின் விருப்பமாக இருக்கும், தேவனுடைய இராஜ்யத்தின் வருகையைப் பற்றிய அவருடைய மகத்தான தீர்க்கதரிசனத்தினால், அவர்களுடைய பெருகிவரும் விசுவாசத்திற்கு வெகுமதி அளிக்க இருந்தார்.

இவைகளை சம்பாஷிக்கையில் (வசனங்கள் 1-3), இயேசுவிடம், ஆலயத்தின் கட்டடங்களை, காண்பிப்பதில் அவர்களது விருப்பம், அவர்களுக்குள்ளிருந்த உலக சிந்தனையை வெளிப்படுத்தியது. அவர்கள் "விசுவாசத்தின் அடையாளத்தை" தவறவிட்டார்கள். தேவனுடைய உண்மையான மகிமை பூமிக்குரியதாக இராமல், ஆவிக்குரிய கண்களால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும் என்பதை அவர்களுக்கு நினைப்பூட்டுவதன் மூலம் அவைகளை "பார்க்கும்படிக்கு" இயேசு அவர்களுக்கு அழைப்பு கொடுத்தார். "முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்" (மத்தேயு 6:33) என்ற இயேசுவின் முந்தைய அற்புதமான அறிவுரைகளை இது நிச்சயமாக நினைப்பூட்டியது.

ஒருவேளை ஆலயத்தின் கவர்ச்சிகரமான கட்டிடங்கள், அதன் மாட்சிமை மற்றும் அழகினால், சீஷர்கள் பெருமை கொண்டிருந்ததினால், அதை இயேசு விடம் காட்டும்படி அவர்களை தூண்டியிருக்கும். அந்த கட்டிடங்களினால் ஈர்க்கப்பட்ட காரியம், அவர்களது விசுவாசத்தின் சரியான தூண்டுதல் என்று எண்ணி, இயேசுவும் அவர்களைபோல ஈர்க்கப்படுவார் என்று நினைத்தார்கள்!

நம்முடைய ஆண்டவரின் மகத்தான தீர்க்கதரிசனமே அவர்களுடைய விசுவாசத்திற்கான சரியான தூண்டுதலாக இருந்தது. இயேசு சீஷர்களுக்கு தேவையான முன்னேற்பாடுகளை மறுசீரமைக்கும் கருவிகளை கொடுப்பதற்கு சிறிது நேரம் இருந்தபோதிலும், தொடர்ந்து ஆலயத்தின் உடனடியான

அழிவைப் பற்றி கூறி, இந்த எரிச்சலூட்டும் அறிவிப்போடு அவர்களது ஆவிக்குரிய கண்களை திறந்தார். இயேசு அவர்களை ஆழ்ந்த ஆவிக்குரிய விழிப்புணர்ச்சியால் அதிர்ச்சிக்குள்ளாக்கி, இன்னும் அதிகமாக தெரிந்து கொள்ளும் விருப்பத்தை அவர்களுக்கு தூண்டினார்.

சீஷர்களின் மனித நேயத்தை அவர் புரிந்துக் கொள்வதே, நம்முடைய ஆண்டவருடைய மகத்தான தீர்க்கதரிசனத்தின் முதல் படிப்பினை என்பதை நாம் காண்கிறோம். இயேசுவின் நிபுணத்துவமான வழி காட்டுதல் மற்றும் போதனைகள், உன்னதமான ஐந்து படிகள் கதைசொல்லும் நுட்பத்தின் வழியாக செயல் விளக்கம் அளிக்கப்படுகிறது.

(1) சத்தியத்தைத் தேடுவதில் அவருடைய சீஷர்களை **ஜெயங்கொண்டவர்களாக்குவது.**

(2) இயேசுவை அவர்களுடைய **வழிகாட்டியாக** நிறுவப்படுதல். (மத்தேயு 24:4)

(3) அவர்களுக்குள் தடையற்ற விசுவாசத்தை தூண்டுவதற்கான **கருவியாக** தீர்க்கதரிசனத்தை அவர்களுக்கு (மற்றும் நமக்கும்) அளித்தார்.

(4) முன்னால் உள்ள கடினமான தடைகளை சமாளிக்க, தீர்க்கதரிசனத்தை ஒரு கருவியாக எவ்வாறு பயன்படுத்துவது என்பதைக் **காட்ட**; விழித்திருந்து (வசனங்கள் 5-12), காத்திருந்து (வசனம் 13) மற்றும் அதை செய்வதற்கு (வசனம் 14)

(5) எதிரியின் வேலையை அழிக்க (வசனம் 43), தேவனுடைய இராஜ்யத்திற்குள் துரிதப்படுத்தும், ஏற்றகால சத்தியங்களினால் சபையை போஷித்தல் (வசனம் 45) என்ற அவரது வாக்குறுதியான **பொக்கிஷத்தை** சுட்டிக்காட்டி அவருடைய மகத்தான தீர்க்க தரிசனத்தை நிறைவுச் செய்தார்.

இந்த ஐந்து-படி கதைச்சொல்லும் நுட்பம், நவீன இலக்கியம் மற்றும் சினிமா முழுவதிலும் பெறும் விளைவுகளுடன் பயன்படுத்தப்படுகிறது. மற்றவர்களைக் கற்பிப்பதற்காக நம்முடைய சொந்த விசுவாசத்தின் கதையை நாம் வடிவமைப்பது போல, இயேசு அவருடைய சீஷர்களுக்கு அத்தகைய முக்கியமான சத்தியங்களை கற்பிப்பதற்காக அவர் பயன்படுத்திய எளிதான வழிகளை நாம் மறந்துவிட கூடாது.

சீஷர்கள் கொண்டிருந்த உண்மையான விசுவாசம், அவர்கள் இயேசுவின் மேல் வைத்திருந்த அன்பின் வல்லமையால் இயக்கப்பட்டது. ஆகையால், இயேசுவின் மகத்தான தீர்க்கதரிசனம், தேவனுடைய வல்லமையோடு அவர்களை இணைத்து, அவர்களது கனவுகளையும் நம்பிக்கைகளையும் நடத்தி, மற்றும் அடுத்த 2000 வருடங்களுக்கு மற்றவர்களின் விசுவாசத்தை ஊக்குவிக்கும் ஒரு சுத்தமான மொழியாக இருந்தது.

அதற்கு மாறாக, அடுத்த 2000 ஆண்டுகளில், மனுக்குலத்தின் உலகம் தொலைந்துவிடும். இன்றைய தீமையான உலகத்தின் உபத்திரவத்திரவத்தினால் ஆயத்தமாக இருக்கும் மனுக்குலம், இயேசுவின் இந்த சுத்தமான மொழியை மட்டுமே பெற தயாராக இருப்பார்கள். (சகரியா 3:8-9) தேவன் தமது ஆவியை இந்த உலகின் மனுக்குலத்தின் மேல் ஊற்றிய பிறகே அவர்களது ஆவிக்குரிய விழிப்புணர்வு ஏற்படும். மேலும், தேவனுடைய இராஜ்யத்தில் அவர்களும் அவர்களுடைய எல்லாவற்றையும் இயேசுவுக்கு கொடுப்பார்கள் - மனுஷருடைய இராஜ்யங்கள் அழிக்கப்பட்ட பின் மற்றும் மனுக்குலத்தின் நம்பிக்கைகள் விருதா என்று காண்பிக்கப்பட்ட பின், அவர்களது கனவுகள் அனைத்தும் காற்றில் பறக்கும் தூசியைப்போலாகும்.

சீஷர்களின் மூன்று கேள்விகளிலிருந்து நாம் என்ன பாடங்களை கற்றுக்கொள்கிறோம் ? இயேசுவினிடம் கேள்விகளை கேட்டு, அவருடைய பதில்களை கவனமாக சிந்தித்து பார்க்கவேண்டும் ! நாம் "வெளியே பார்ப்பதற்காக நம்முடைய சொந்த உலக காட்சியின் ஜன்னலை திறக்கும்போது", நம்முடைய எதிர்பார்ப்புகளுக்கு எதிரான நிகழ்வுகளை கண்டால், நம்மையும் அதேபோல நடத்துவதற்கு இது இயேசுவின் வழியாக இருக்கவேண்டும். அதாவது, இயேசுவின் தீர்க்கதரிசனமான சத்தியத்தின் சுத்தமான மொழியை நமக்கு காண்பிக்கவும், நம்முடைய முன்னேற்பாடுகளை மறுசீரமைப்பதற்கான ஒரு வாய்ப்பாகவும், நெருக்கமான போதனை அல்லது வழிக்காட்டும் தருணமாகவும் அது இருக்கலாம். நாம் "வெளியில் பார்க்க நம்முடைய சொந்த உலகக் கண்ணோட்டத்தைத் திறக்கும் போது, "நம்முடைய எதிர்பார்ப்புகளுக்கு முரணான நிகழ்வுகளைப் பார்க்கும் போது, இது நம்மை ஒத்த, நெருக்கமான கற்பித்தல்/வழி காட்டும் தருணத்திற்குள் கொண்டுவருவதற்கான இயேசுவின் வழியாக இருக்கலாம், நம்முடைய முன்னுரிமைகளை மறு சீரமைக்கவும் அவருடைய தீர்க்கதரிசன சத்தியத்தின் தூய மொழியை நமக்கு காட்டவும் இயேசுவுக்கு இது ஒரு வாய்ப்பாகும்.

நம்முடைய பணி மிக எளிது, ஆனாலும், அது மிக கடினம்! நாம் கவனிக்கவேண்டும், காத்திருக்கவேண்டும், சுவிசேஷத்தின் வேலையை செய்யவேண்டும் மற்றும் ஆயத்தமாக இருக்கவேண்டும். நம்முடைய ஆண்டவரின் மகத்தான தீர்க்கதரிசனம், "மாணவர் தயாராக இருக்கும்

போது, ஆசிரியர் தோன்றுவார்" என்ற வேதாகமத்தின் பழமொழியை நமக்கு நினைப்பூட்டுகிறது. விழித்திருப் பவர்களுக்கு மட்டுமே இயேசு இருக்கிறார்!

இயேசுவை காண்பதினால் நம்முடைய கண்கள் பாக்கியமுள்ளது மற்றும் அவருடைய வார்த்தைகளை கேட்பதினால் நம்முடைய காதுகள் பாக்கியமுள்ளது. உலகம், மாம்சம் மற்றும் எதிராளியின் தாக்கங்களை நாம் அகற்றுவதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தாலும், நம்முடைய மாபெரும் போதகரினால் கற்பிக்கப்படுவதற்கு நாம் எப்போதும் ஆயத்தமாக இருப்போம்.

| மத்தேயு 24 | மாற்கு 13 | லூக்கா 21 |
|---|---|---|
| 1. இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுப் போகையில், அவருடைய சீஷர்கள் தேவாலயத்தின் கட்டடங்களை அவருக்குக் காண்பிக்க அவரிடத்தில் வந்தார்கள்.<br>2. இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.<br>3. பின்பு, அவர் ஒலிவ மலையின் மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள். | 1. அவர் தேவாலயத்தை விட்டுப் புறப்படும்போது, அவருடைய சீஷர்களில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே, இதோ, இந்தக் கல்லுகள் எப்படிப் பட்டது! இந்தக் கட்டடங்கள் எப்படிப்பட்டது! பாரும் என்றான்.<br>2. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இந்தப் பெரிய கட்டடங்களைக் காண்கிறாயே, ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்றார்.<br>3. பின்பு, அவர் தேவாலயத்துக்கு எதிராக ஒலிவ மலையின்மேல உட்கார்ந்திருக்கையில், பேதுருவும் யாக்கோபும் யோவானும் அந்திரேயாவும் அவரிடத்தில் தனித்துவந்து:<br>4. இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? இவைகளெல்லாம் நிறைவேறுங் காலத்துக்கு அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள். | 5. பின்பு, சிறந்த கற்களினாலும் காணிக்கைகளினாலும் தேவாலயம் அலங்கரிக்கப் பட்டிருக்கிறதைக் குறித்துச் சிலர் சொன்னபோது,<br>6. அவர்: நீங்கள் பார்க்கிற இவைகளில் ஒரு கல் மற்றொரு கல்லின் மேலிராத படிக்கு எல்லாம் இடிக்கப்படும் நாட்கள் வரும் என்றார்.<br>7. அவர்கள் அவரை நோக்கி: போதகரே, இவைகள் எப்பொழுது சம்பவிக்கும், இவைகள் சம்பவிக்கும் காலத்துக்கு அடையாளம் என்ன என்று கேட்டார்கள். |

மத்தேயு 24:4-14

# "முடிவுக்கு" முன் நிகழ வேண்டிய காரியங்கள்



"முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான்" (மத்தேயு *24:13* )

***Thomas Gilbert***

மத்தேயு 24ம் அதிகாரத்தில், நம்முடைய ஆண்டவரின் மகத்தான தீர்க்கதரிசனம், அவருடைய நீண்ட உரையாடல்களில் ஒன்றாகும். இந்த தீர்க்கதரிசனத்தின் முதல் 11 வசனங்களில், சம்பவங்களையும், வஞ்சனை களையும், அவருடைய சீஷர்கள் எதிர்நோக்கும் உபத்திரவங்களையும், சீக்கிரத்தில் நிகழக்கூடிய அவருடைய பிரிவுக்கும், அவர் வாக்களித்த அவருடைய வருகைக்கும் இடையே உள்ள அனுபவத்தையும், அதாவது சீஷர்கள் விசாரித்து அறிய விரும்பி அவருடைய பிரசன்னம் அல்லது பரோஷியாவைப் பற்றியும் இயேசு விவரிக்கிறார்.

தேவனிடமிருந்து அனுப்பப்படுவதாக கூறி ஏமாற்றுபவர்களிடம், மிக கவனமாக இருக்கும்படிக்கு இயேசு தம்முடைய சீஷர்களை எச்சரித்தார். இத்தகைய கோரிக்கைகளை ஏற்படுத்தி, கூட்டங்களை கூட்டிய இரண்டு நபர்களைப் பற்றி கமாலியேல் குறிப்பிடுகிறார் - தெயுதாஸ் மற்றும் கலிலேயாவின் யூதாஸ் (அப்போஸ்தலர் 5:33-39) சுவிசேஷ யுகத்தின்போது, ஐம்பது அல்லது அதற்கும் மேற்பட்ட கள்ள கிறிஸ்துக்கள் இருந்திருந்தார்கள் என்று பாஸ்டர் ரஸல் கூறுகிறார். (*The Battle of Armageddon*, pages 565-566) குறிப்பாக சிமிர்னாவில் (1626-1676), சாபாத்தை சேவி (Sabbathai Zevi) என்பவர், தன்னை தான் "தேவனுடைய முதற்பேரான குமாரன், மேசியா, இஸ்ரயேலின் இரட்சகர்" என்று 1648 ல் அறிவித்தார்.

தனிநபர்களை தவிர, மத நிறுவனங்களும் கிறிஸ்துவின் அதிகாரத்தையும், அவருக்காக பேசக்கூடிய உரிமைப் பெற்றவர்கள் என்றும் கோரியுள்ளனர். போப் கிறிஸ்துவின் "ஆயர் அல்லது புலப்படக்கூடிய பிரதிநிதி" என்றும், "போப் மிக உயாந்த அதிகாரத்தைப் பெற்றுள்ளார்" என்றும், "கிறிஸ்துவின் தவறு இழைக்காத வழி நடத்தல் பேதுரு அதற்குபின், மற்ற அப்போஸ்தலர்களும், அதற்குபின் பாப்பரசர்களுக்கும், ஆயர்களுக்கும் கடந்து வந்ததாக ரோம கத்தோலிக்க சபையின் கோட்பாடு போதிக்கிறது. இதிலிருந்து வேறுபட்டவர்கள் பெரும்பாலும் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர்.

### யுத்தங்கள், பஞ்சங்கள் மற்றும் பூமி அதிர்ச்சிகள்

யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள் என்று இயேசு அவருடைய சீஷர்களிடம் கூறினார். இத்தகைய மோதல்கள், மனித அரசாங்கங்களின் சரிவு மற்றும் தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதை குறிப்பிடுவதாக அவர்கள் விளக்கம் அளிக்கலாம். கடந்த 3,400 ஆண்டுகளில், தேசங்களில் 250 வருடங்கள் மட்டுமே சமாதானமாக இருந்தது என்று ஒரு மூல மதிப்பீடு கூறுகிறது. வரலாற்றில், போர்களில் கொல்லப்பட்டவர்கள் 150 மில்லியனிலிருந்து 1பில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் என்று மதிப்பிடப்படுகிறது.

"முடிவு உடனே வராது" என்பதால் யுத்தங்களை கண்டு கலங்கவேண்டாம் என்று இயேசு கூறினார். "அவருடைய கடைசி இரவின் போது, "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சாமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன், உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:27) என்று இயேசு சீஷர்களிடம் கூறினார்.

பஞ்சத்தினாலும், பூமி அதிர்ச்சிகளினாலும் சுவிசேஷ யுகம் வகைப்படுத்தப்படுகிறது. (characterized) கி.மு 108 மற்றும் கி.மு 1911க்கு இடையே, சீனாவில் 1,828 பஞ்சங்கள் ஏற்பட்டது. சீனாவின் அரசாங்கக் கொள்கையில் சுயநலமான மாற்றங்களினால், 1958 -1962 ஆம் ஆண்டுகளில் பெறும் பஞ்சம் ஏற்பட்ட காரியம் ஒரு துயரமான சம்பவமாகும். அதில் 36 மில்லியன் நபர்கள் கொல்லப்பட்டார்கள். 1845-1849 வருடங்களில், ஐரிஷ் உருளைக்கிழங்கு பஞ்சம் (Irish Potato Famine) 1.5 மில்லியன் மக்களை கொன்றது. சோவியத் ஒன்றியத்தில், 20வது நூற்றாண்டின் மூன்று முக்கிய பஞ்சங்கள் 9.5 -14.5 மில்லியன் மக்களைக் கொன்றது. யுத்தங்கள், வறட்சி மற்றும் கிளர்ச்சிகளின் விளைவாக ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில் மீண்டும், மீண்டுமாக பஞ்சம் ஏற்பட்டது.

நம்முடைய காலங்களிலும் குறிப்பிடத்தக்க பல பூமி அதிர்ச்சிகள் ஏற்பட்டுள்ளது. இந்தியப் பெருங்கடலில், இதுவரை பதிவுசெய்யப்பட்ட மூன்று வலுவான பூமி அதிர்ச்சிகள் - சிலி (1960), அலாஸ்கா (1964), சுமத்ரா, இந்தோனேசியா (2004) 1556,1920, மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் சீனாவில் மூன்று மிகப்பெரிய பூமி அதிர்ச்சிகள் நிகழ்ந்தன, அதில் 1.3 மில்லியன் ஜனங்கள் கொல்லப்பட்டனர். 2011ல் ஜப்பான் கடற்கரையில் ஏற்பட்ட பூகம்பமான சுனாமி 235மில்லியன் சேதங்களை ஏற்படுத்தியது.

இந்த நிகழ்வுகளுக்கு அடையாளமான அர்த்தங்களும் இருக்கலாம். ஆமோஸ் 8:11 கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்பதற்கான பஞ்சத்தை பற்றி பேசுகிறது. அடக்குமுறை அரசாங்கங்களை தூக்கி எறிய அல்லது மற்ற இனத்திற்குரிய சித்தாந்த குழுக்களின் அதிகாரத்தை கைப்பற்ற மக்களின் எழுச்சிகளையும் இந்த பூமி அதிர்ச்சி அடையாளப்படுத்தலாம். இவைகள் ஏறக்குறைய மிகபெரியதும், சொல்லர்த்தமான பூமி அதிர்ச்சிகளாகும். இந்த நிகழ்வுகள் "புதிய வானம் மற்றும் புதிய பூமிக்கு" வழிநடத்தும் ஒரு "பிரசவ வேதனைக்கு ஆரம்பம்" என்று இயேசு கூறுகிறார். (ஏசாயா65:17, 66:22, 2பேதுரு 3:13,, வெளிப்படுத்தல் 21:1) அதே சமயத்தில், அவருடைய சீஷர்கள் வெறுக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, கொல்லப்படுவார்கள். தங்களுடைய விசுவாசத்தின் நிமித்தம் உபத்திரவத்தை சகித்தவர்களைப் பற்றியும், மற்ற கிறிஸ்தவர்களைப் பற்றியும் அநேக புத்தகங்கள் உண்டு. "தேவபக்தியாக நடக்க மனதாயிருக்கும் யாவரும் துன்பப்படுவார்கள்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். (2 தீமோத்தேயு 2:12)

பலரை தவறான வழியில் நடத்தக்கூடிய கள்ள தீர்க்கதரிசிகளை குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி இயேசு தம்முடைய சீஷர்களை எச்சரித்தார். தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகள் எனக் கூறிக்கொண்டு, ஜனங்களால் ஆரம்பிக்கப்பட்ட பெரிய மதங்கள் உண்டு. இவர்களில் பெரும்பான்மையினர் இஸ்லாமியர்(1.8 பில்லியன் ஆதரவாளர்கள்), இது அரேபியாவில் முஹமதால் 600ஆம் ஆண்டின் துவக்கத்தில் நிறுவப்பட்டது. டேவிட் கோரேச் (Branch Davidians, Waco, Texas,1993) போன்ற தனிநபர்களும் "இறுதி தீர்ப்பின் நாள்" "doomsday" தீர்க்கதரிசிகளாக இருந்தனர், இவர்களை பின்பற்றின சிறிய கூட்டங்களை ஏமாற்றினர். துன்மார்க்கத்தின் அதிகரிப்பின் காரணமாக, அநேகருடைய அன்பு தணிந்து போய்விடும் என்று இயேசு கூறுகிறார். சபையை துன்புறுத்துபவராகவும், புறமதத்தின் மீதுள்ளவர்களுக்கும், அதன் சொந்த அணி களுக்குள்ளே உள்ள எதிர்ப்பாளர்களுக்கும் எதிராக துன்புறுத்துபவராக மாறியது. காணும் பொருளே உண்மை என்ற வாதமும், தொழில் நுட்பமும் இப்போது ஒருவர் மேல் ஒருவர் கொண்டிருக்கும் அன்பான உறவுகளிலிருந்து ஜனங்களை திசைதிருப்புகிறது. ஆகையால் "ஒருவர் மேல் ஒருவர் அன்பு கூறவேண்டும்" என்ற கட்டளையை கடைப் பிடிப்பவர்கள் மட்டுமே அவருடைய குமாரனுடைய இராஜ்யத்தில் முழு மனுக்குலத்தையும் ஆசீர்வதிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இயேசுவைபோல மற்றவர்களை நேசித்து, அவர்களை காப்பாற்றுவதற்காக தம் ஜீவனை கொடுக்கக்கூடிய அளவுக்கு அவர்களை மதித்த, அந்த அன்பின் நிலையை, தேவன் நம்மிடமும் எதிர்ப்பார்க்கிறார்.

யுகத்தின் முடிவுக்கு முன் இராஜ்யத்தின் சுவிசேஷம் சகல ஜாதிகளுக்கும் பிரசங்கிக்கப்படும் என்று இயேசு கூறுகிறார். 1800 களின் துவக்கத்தில், வேதாகம சங்கங்களினால், பல மொழிகளில் வேதாகமம் கிடைத்தது. 2017ன் முடிவில், உலகின் ஜனத்தொகையில் 5.4 பில்லியன் பேர்கள் பேசிய 674 மொழிகளில் வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாடு 1,515 பிற மொழிகளில் 631 மில்லியன் ஜனங்களை அடைந்தது. இவ்வாறு, 83 சதவிகித ஜனங்கள் "தேவனுடைய இராஜ்யத்தின் சுவிசேஷத்தை" வாசிக்க வழிவகுத்தது. (மாற்கு 1:14)

இப்பொழுது, வேதாகம சூழற்சிகள், வேதாகம படிப்புகளுக்கான ஆய்வுகள் ஆகியவற்றை இணையம் உலகளாவிய அளவில் பகிருவதற்கு அனுமதிக்கிறது. பூமியில் உள்ள எல்லா தேசங்களையும் ஆசீர்வதிப் பதற்கான தேவனுடைய திட்டத்தை பிரசங்கிக்க வேத மாணாக்கர்கள் இந்த தொழில் நுட்பத்தை உலகம் முழுவதிலும் பயன்படுத்துகிறார்கள். மேலும் இது வரையில் வாழ்ந்த அனைவருக்கும் ஜீவனை கொடுப்பதற்கு கிறிஸ்துவின் ஈடுபலி உத்தரவாதம் அளிக்கிறது.

இயேசு இந்தத் தீர்க்கதரிசனத்தை உரைத் ததிலிருந்து 2000 ஆண்டுகளாக இந்த உலகம் அதிகமாக

கொந்தளிப்புகளையும், எழுச்சிகளையும் மற்றும் துயரங்களையும் அனுபவித்திருக்கின்றன. அவர் வழங்கிய நற்செய்தி பல ஜனங்களை, அவருக்கும் அவருடைய பரலோக தகப்பனுக்கும் தங்களை அர்ப்பணிக்க தூண்டியது. சுவிசேஷத்தை பரப்புவதற்குரிய பணியை நிறைவேற்றுவதற்காக சபை நிறுவனமய மாக்கப்பட்டது, ஆனால் இது உன்னதமான ஊழியத்திற்கு தகுதி குறைந்த தலைவர்களினால் ஊழலுக்கு வழிநடத்தியது.

தேவனுடைய உண்மையான குணலட்சனமும், இராஜ்யத்தின் நம்பிக்கையும் உண்மையாகவே சத்தியத்தைத் தேடிக்கொண்டிருப்பவர் களைத் தவிர அனைவருக்கும் மறைக்கப்பட்டது. இந்த சத்தியங்களை கண்டுபிடித்து, அதன்படி நடந்தவர்கள் வெளியேற்றப்பட்டு, துன்புறுத்தப்பட்டனர். தேவனுடைய குணாம்சத்திற்கும், அவருடைய இரட்சிப்பு மற்றும் மறுசீரமைப்பின் திட்டங்கள் வெளிப்படுவதற்கும் நாம் எவ்வளவாய் காத்திருக்கிறோம்!

| மத்தேயு 24 | மாற்கு 13 | லூக்கா 21 |
|---|---|---|
| 4. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; | 5. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். | 8. அதற்கு அவர்: நீங்கள் வஞ்சிக்கப் படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நான்தான் கிறிஸ்து என்றும், காலம் சமீபித்தது என்றும் சொல்லுவார்கள்; அவர்களைப் பின்பற்றாதிருங்கள். |
| 5. ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். | 6. ஏனெனில் அநேகர் வந்து, என் நாமத்தைக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். | |
| 6. யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப் படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்க வேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது. | 7. யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படும் போது கலங்காதேயுங்கள்; இவைகள் சம்பவிக்க வேண்டியதே. ஆனாலும், முடிவு உடனே வராது. | 9. யுத்தங்களையும் கலகங்களையுங் குறித்து நீங்கள் கேள்விப்படும் போது, பயப்படாதிருங்கள்; இவைகள் முன்னதாகச் சம்பவிக்க வேண்டியதே; ஆனாலும் முடிவு உடனே வராது என்றார். |
| 7. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். | 8. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும், பஞ்சங்களும் கலகங்களும் உண்டாகும்; இவைகள் வேதனைகளுக்கு ஆரம்பம். | 10. அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோத மாய் ராஜ்யமும் எழும்பும். 11. பல இடங்களில் மகா பூமியதிர்ச்சிகளும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் உண்டாகும்; வானத்திலிருந்து பயங்கரமான தோற்றங்களும் பெரிய அடையாளங்களும் உண்டாகும். |
| 8. இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம். 9. அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக் கொடுத்து, உங்களைக் கொலை செய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப் படுவீர்கள். | 9. நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுப்பார்கள், நீங்கள் ஜெபஆலயங்களில் அடிக்கப் படுவீர்கள்; என்னிமித்தம் தேசாதிபதிகளுக்கும் ராஜாக்களுக்கும் சாட்சியாக அவர்களுக்கு முன்பாக நிறுத்தப்படுவீர்கள். | 12. இவைகளெல்லாம் நடப்பதற்கு முன்னே என் நாமத்தினிமித்தம், அவர்கள் உங்களைப் பிடித்து, ஜெப ஆலயங்களுக்கும் சிறைச் சாலைகளுக்கும் ஒப்புக் கொடுத்து, ராஜாக்கள் முன்பாகவும் |

| மத்தேயு 24 | மாற்கு 13 | லூக்கா 21 |
|---|---|---|
| 10. அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள்.<br>11. அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்.<br>12. அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்து போம்.<br>13. முடிவுபரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான்.<br>14. ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். | 10. சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷம் முந்திப் பிரசங்கிக்கப்பட வேண்டும்.<br>11. அவர்கள் உங்களைக் கொண்டுபோய் ஒப்புக்கொடுக்கும்போது, நீங்கள் என்ன பேசுவோமென்று முன்னதாகக் கவலைப்படாமலும் சிந்தியாமலுமிருங்கள்; அந்த நாழிகையிலே உங்களுக்கு எது அருள்செய்யப்படுமோ அதையே பேசுங்கள்; ஏனெனில் பேசுகிறவர்கள் நீங்களல்ல, பரிசுத்த ஆவியே பேசுகிறவர்.<br>12. அன்றியும் சகோதரன் சகோதரனையும், தகப்பன் பிள்ளையையும் மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள்; பெற்றாருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி, அவர்களைக் கொலை செய்வார்கள்.<br>13. என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். முடிவுபரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப் படுவான். | அதிபதிகள் முன்பாகவும் உங்களை இழுத்துத் துன்பப்படுத்துவார்கள்.<br>13. ஆனாலும் அது உங்களுக்குச் சாட்சியாவதற்கு ஏதுவாயிருக்கும்.<br>14. ஆகையால் என்ன உத்தரவு சொல்லுவோமென்று கவலைப்படாதிருக்கும்படி உங்கள் மனதிலே நிர்ணயம் பண்ணிக்கொள்ளுங்கள்.<br>15. உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர் பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்.<br>16. பெற்றாராலும், சகோதரராலும், பந்துஜனங்களாலும், சிநேகிதராலும் காட்டிக் கொடுக்கப்படுவீர்கள் உங்களில் சிலரைக் கொலைசெய்வார்கள்.<br>17. என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப் படுவீர்கள்.<br>18. ஆனாலும் உங்கள் தலைமயிரில் ஒன்றாகிலும் அழியாது.<br>19. உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள். |

மத்தேயு 24:15-28

# விரைந்தோடுவதற்கான கட்டளை



Harry Wildblood

"புறப்படுங்கள், புறப்படுங்கள், அவ்விடம்விட்டுப் போங்கள், அசுத்தமானதைத் தொடாதிருங்கள், கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே அதின் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களைச் சுத்திகரியுங்கள்." (ஏசாயா *52:11* )

இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின்போது, அவர் கொடுத்த மிக நுணுக்கமான பாடங்களில், ஆண்டவரின் மகத்தான தீர்க்கதரிசனம் ஒன்றாகும். தேசங்களின் நியாயத்தீர்ப்பு, ஜனங்களுக்கு கற்பித்தல், வரக்கூடிய சம்பவங்களுக்காக சீஷர்களை மற்றும் அப்போஸ் தலர்களை ஆயத்தப்படுத்துதல், மேலும் யுகத்தின் முடிவில் சரீர அங்கத்தினர்களை பலப்படுத்துதல், ஆகியவற்றின் தொடர்ச்சியான சில நிகழ்வுகள், அவருடைய வாழ்க்கையின் கடைசி சில நாட்களில் கொடுக்கப்பட்டது. தீர்க்கதரிசன நேரத்தில் மட்டும் அல்ல, பலியின் யுகம் முழுவதிலும், குறிப்பாக ஆண்டவருடைய வருகைக்கும், அதற்கு பிறகும், உள்ள உண்மையுள்ள சீஷர்களின் முன்னதாகவே இருந்த எதிர்பார்ப்புக்கும், அது பதில் அளித்தது.

ஆரம்பத்தில் இயேசு வஞ்சனைகளைக் குறித்து எச்சரிக்கிறார். (மத்தேயு24:4-5) "வஞ்சகம்" என்று மொழிபெயர்க்கப்பட்டதற்கு, "ஏமாற்று", "துர் போதனை செய்", "தவறான வழிநடத்துதல்" என்று பொருள்படுகிறது, அதாவது எதிராளியின் இலக்கின் ஒரு பொருத்தமான பிரதிநிதியாகும். கிறிஸ்துவின் சரீரம் தன்னுடைய இலக்கிலிருந்தும், உடன்படிக்கையிலிருந்து வழிவிலகி செல்லுவதற்கு திசைத்திருப்புதலாகும். பலரை வஞ்சிக்கும் ஒரே அமைப்பு போப் அமைப்பாகும். இதை குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் (2தெசலோனிக்கேயர் 2:3) ல் எச்சரித்தார்.

மத்தேயு **24:6-14** ல் சாத்தானின் "வஞ்சகம்" ஒரு நீண்ட காலத்திற்கு அதிகமாகவோ அல்லது குறைவானதாகவோ வெற்றி பெறும் என்று குறிப்பிடுகிறது. யுகத்தின் முடிவுக்கு ஆயத்தமாக இந்த சுவிசேஷம் உலகெங்கும் "சாட்சியாக" பிரசங்கிக்கப்படும். (இது உலகத்தை மனம் திருப்பாது) சீர்திருத்தம், 1799க்குப் பின் வேதாகம சங்கங்கள் மற்றும் 1829 முதல் 1844 வரை மில்லர் இயக்கம், கட்டியெழுப்பவும், சுத்திகரிக்கவும், கர்த்தருடைய திரும்புதலுக்கு பரிசுத்தவான்களை ஆயத்தப்படுத்தவும் உதவியது. இது நம்மை 15ம் வசனத்திற்கு கொண்டுவருகிறது, இது அறுவடையின் துவக்கத்தில், யுகத்தின் முடிவில், ஆண்டவரின் வருகையைப் பற்றி பரிசுத்தவான்களுக்கான செய்தியை கொடுக்கிறது.

சிலுவையில் அறையப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு நிகழக்கூடிய சம்பவங்களுக்காக சீஷர்களை பலப்படுத்தவும் அவர்களை ஆயத்தப்படுத்தும்படியாக, லூக்கா 21:20, எருசலேம் மற்றும் யூதேயாவின் நேரடி அழிவைப் பற்றி பேசுகிறது. ஆனால் மத்தேயு மற்றும் மாற்கு இதை கடந்து சென்று சுவிசேஷ யுகத்தின் முடிவில் மகா உபத்திரவத்தைப் பற்றி பேசுகிறது.

**தானியேலின் அழிந்துபோகும் அருவருப்பு**

**மத்தேயு 24:15.** "மேலும், பாழாக்குகிற அருவருப்பைக்குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது" பாழாக்கும் அருவருப்பு கத்தோலிக்க பூசை பலியாகும். பாவங்களை நிவிர்த்தி செய்வதற்காக, கத்தோலிக்க சபைகள் பாதிரியார்களையும், அதன் அமைப்புகளையும் தொடர்ந்து சார்ந்திருப்பதற்காக, கிறிஸ்துவின் சரீரத்தை புதிதாக உருவாக்கி, மீண்டும் மீண்டுமாக அதை சிலுவையில் அறைவதாக இது கோருகிறது. இது தேவனுக்கு அருவருப்பானது. மேலும் "அனைவருக்கும் அவர் மீட்கும் பொருளாக" காணக்கூடிய அனைவருக்கும் இது அருவருப்பானது. "அவர் மரித்தது, பாவத்திற்கென்று **ஒரேதரம்** மரித்தார்"(ரோமர் 6:10) என்று பவுல் தெளிவாக நமக்கு கூறுகிறார். "தம்மைத் தாமே பலியிட்டதினாலே இதை **ஒரே தரம்** செய்து முடித்தார்" (எபிரெயர் 7:27)"தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் **ஒரேதரம்** மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார்." (எபிரெயர் 9:12), "அவர் தம்மைத் தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்." (எபிரெயர் 9:26)

இந்த பாழாக்கும் அருவருப்பு, "நிற்க காண்பவர்கள்" (கடந்த காலம்), அதை தெளிவாக புரிந்துக்கொண்டு, அதை உணரக்கக்கூடியவர்களுக்கு மட்டுமே கர்த்தருடைய எச்சரிப்புக் கொடுக்கப்படுகிறது. ஆனால் அந்திக் கிறிஸ்து அமைப்பு "முழுமையாக

நிற்கும்" வரையில், அதை விட்டு வெளியேறுவதற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. (வெளிப்படுத்தல் 18:4) -- அதாவது 1798 -1800 ஆம் ஆண்டுகளில் தற்காலிகமாக போப் அமைப்பு சில காலம் நிறுத்தப்பட்ட வரையிலும்.

பரிசுத்த ஸ்தலத்தில் (சபையில்) பாழாக்கும் அருவருப்பாகிய பூசை பலியைப் பற்றி தானியேல் 12:11ல் விவரிக்கப்படுகிறது. "பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படுங்காலமுதல்" இது கத்தோலிக்க பூசை பலியையும், போப் அமைப்பு தற்காலிகமான வல்லமையில் ஸ்தாபிக்கப்பட்டதையும் மற்றும் 1846 ஆம் ஆண்டில் வில்லியம் மில்லர் மற்றும் பிறர் மூலம் இரண்டாம் அட்வென்டு இயக்கத்தோடு, பரிசுத்த ஸ்தலத்தை சுத்திகரிப்பதில், கடந்த 1799 லிருந்து 1829 வரைக்கும் அதனுடைய செல்வாக்கு தொடர்ந்ததைப் பற்றி விவரிக்கிறது.

மத்தேயு 24ல் உள்ள மூன்று வசனங்களும் ஆவியால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களிடம் அதாவது, 15ம் வசனத்தின் நிலைமையை " பார்க்க" முடிந்தவர்களிடம் பேசப்படுகிறது. தேவனையும், அவருடைய குமாரனையும், அவருடைய திட்டத்தையும் மற்றும் அனைவருக்காக செலுத்தப்பட்ட ஒரே பலியையும் பற்றி தவறான விளக்கங்களை உணரக்கூடியவர்கள், தவறான பிரிவினையான அமைப்புகளிடமிருந்து தங்களை நீக்கிக்கொள்வதற்கான பொறுப்பை அவர்கள் உணர்ந்து கொள்ளும்படி அறிவுறுத்துகிறது.

**என் ஜனங்களே, அவளைவிட்டு வெளியே வாருங்கள்**

மத்தேயு 24:16-18."யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள். வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காதிருக்கக்கடவன். வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்குத் திரும்பாதிருக்கக் கடவன்."

யூதேயா, இயேசுவின் நாட்களில் உள்ள பெயர் அமைப்பையும், அதன் நிஜம், அல்லது இணை சுவிசேஷ யுகத்தின் முடிவையும் குறிப்பிடுகிறது. இப்போது, கிறிஸ்த்தவம் என்ற பெயரில் வெகு ஜனங்களை கட்டுப்படுத்த, தேவனையும், அவருடைய குமாரனையும் "தேவனுடைய இராஜ்யம்" என்றும் கோரக்கூடிய பொய் அமைப்புகளின் தொகுப்பை இது அடையாளப் படுத்துகிறது. ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் ஓடிப்போகும்படிக்கு வலியுறுத்தப்படுகிறார்கள். அவர்களது கோட்பாட்டின் தவறான விளக்கத்தையும், அவர்களது அடக்கு முறையின் கீழ் இருந்ததையும் உணர்ந்து, சத்தியத்தின் சுதந்திரத்திற்கு ஓடிவிடவேண்டும். (யோவான் 8:32, 36)

வீட்டின் மேல் உள்ளவர்கள், ஆவிக்குரிய பாபிலோனை பாதுகாக்காதவர்கள். இந்த "வீட்டின் மேலுள்ள" பரிசுத்தவான்கள், வீட்டின் சலுகைகள், கௌரவம், பதவிகள், பட்டங்கள், அல்லது வீட்டின் மற்ற வருமானங்களை மதிப்பிடாமல், விட்டு விட்டு பிரிவினை மனப்பான்மைக்கு திரும்பாமல் இருக்கவேண்டும். "நிலம் உலகம்" (மத்தேயு13:38) என்று இயேசு மற்றொரு உவமையில் கூறினார். இந்த அடையாளத்தை பயன்படுத்தி, "வயலில் இருப்பவர்கள்" ஏற்கனவே பாபிலோன், கிறிஸ்தவ மண்டலம் மற்றும் அதற்கு தொடர்புள்ளவற்றிலிருந்து விலகிவிட்டார்கள். இவர்கள் தங்களது பாதுக்காப்பு, மரியாதை மற்றும் நியாயத்திற்காக, ("வஸ்திரங்களை") தவறான அமைப்புகளுக்கு மீண்டும் ஒருபோதும் செல்லக்கூடாது. "ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்." (கலாத்தியர் 5:1) இங்கு, "வயலில்" இருப்பவர்கள் பிரிவினைவாத (பெயர் அமைப்புகள்) அடிமைத்தனத்தோடு மீண்டும் சிக்கிக் கொள்ளக் கூடாது என்பதே இயேசுவின் அறிவுரையாக உள்ளது.

**மத்தேயு 24:19-20.**"அந்நாட்களிலே கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ. நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வுநாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள்."

இந்த அறிவுரை, வீட்டின் மேலுள்ள பரிசுத்தவான்களுடைய அறிவுரைக்கு ஒத்திருக்கிறது. "பாழாக்கும் அருவருப்பை" கண்டு, அதை புரிந்துக்கொள்ளும்போது, பரிசுத்தவான்கள் கீழ்படிதலோடு பெயர் அமைப்பை விட்டு விட்டு, "மலைக்கு ஓடிப்போகவேண்டும்" (மத்தேயு 24:16) இங்கு சொல்லப்படும் "பால் கொடுக்கக்கூடிய" பரிசுத்தவான்கள், மற்றவர்களின் வளர்ச்சிக்காக அவர்கள் இங்கு தங்கி அவர்களை போஷிக்கவேண்டும் என்ற அவர்களது பொறுப்புணர்வை, குறிப்பிடுகிறது. இது ஒரு தவறாகும். இது இயேசுவின் அறிவுரையை தவிர்த்து, மற்றவர்களுக்கு ஒரு தவறான எடுத்துக்காட்டை முன்வைக்கிறது. முதலில் கீழ்ப்படிந்து,"அவளை விட்டு வெளியே வந்த" பின் தாங்கள் வெளியேறினது போல, மற்றவர்களையும் அந்த பெயர் அமைப்பின் ஒழுங்கு முறையிலிருந்து வெளியே அழைக்கவேண்டும்.

கிறிஸ்துவுக்குள் சில குழந்தைகளை பவுல் தம்முடைய "சிறு பிள்ளைகள்" என்று அழைத் திருந்தாலும், (கலாத்தியர் 4:19), அவர்கள் சத்தியத்தின் வார்ததைகளினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் என்பது தெளிவாகிறது. மேலும், ஒரு தனிநபரோ, ஒரு அமைப்போ அவர்களுக்கு தந்தையாக இராமல், தேவனே அவர்கள் தந்தை என்றும் அத்தாட்சியை அவர் தந்தார். பவுல் தனிப்பட்ட விதமாக சிலருக்கு ஞானஸ்நானம் கொடுத்ததில் மகிழ்ச்சி அடைந்தார். அது பிளவுகளை குறைத்தது. (1கொரிந்தியர் 1:12-15) தன்னுடைய சொந்த அர்ப்பணிப்பை நிறைவேற்றுவதே பவுலின் முக்கிய பொறுப்பாக இருந்தபோதிலும், "உங்கள் சொந்த இரட்சிப்பு நிறைவேற பயத்தோடும் நடுக்கத்தோடும் பிரயாசப்படுங்கள்" (பிலிப்பியர் 2:12) என்று மற்றவர்களை தொடர்ந்து வலியுறுத்தினார்.

மிகுந்த கவனத்திற்கும், கீழ்ப்படிதலுக்கும், ஆர்வத்திற்கும் மற்றும் வைராக்கியத்திற்கும் இந்த புறப்படுதலுக்கான நேரம், ஒரு முக்கிய சோதனையாகும். இந்த தப்பிப்பிழைத்தல் வெறுமனே தீமையினின்று மட்டும் அல்லாமல், நன்மையை நோக்கி இருக்கவேண்டும், அழிவின் அச்சுறுத்துதலிலிருந்து மட்டும் அல்ல, ஆண்டவரோடு நெருங்கிய தொடர்பை நோக்கியதாக இருக்கவேண்டும். கர்த்தரின் உண்மையான பரிசுத்தவான்கள் நீதியின் மேல் பசி தாகமுள்ளவர்களாக இருப்பார்கள். (மத்தேயு 5:6) அவர் வந்துவிட்டார் என்று அவர்கள் "காணும்" போது, அவர்களை விரைந்தோடும்படியாக இக்காரியங்கள் அவர்களை ஊக்குவிக்கிறது. (மத்தேயு 25:6, ஏசாயா 52:8) புத்தியில்லாத கன்னிகைகள் தயங்கினது போல அல்லது லோத் சோதோமை விட்டு வெளியேறுவதற்கு தயங்கினது போல் இராமல், தகவல் கிடைக்கப்பெற்ற உண்மையான பரிசுத்தவான்கள் ஒருபோதும் தயங்கமாட்டார்கள். (ஆதியாகமம் 19:13-16)

முந்தைய அறிவுரைகளும், எச்சரிக்கைளும் கவனிக்கப்படாமல் விடப்பட்டதை காண்பிக்கும் படியாக, இந்த உவமையில், சொல்லப்பட்ட "குளிர்காலம்", பாபிலோன், கிறிஸ்தவ மண்டலத்தின் அழிவின் ஆரம்பமாகும். இந்த நேரத்திற்குள், முன்னதாக எச்சரிக்கப்பட்டிருந்தவர்களால், நிலுவையிலுள்ள அழிவு புரிந்துக்கொள்ளப்படும். அப்போது மணவாளன் மேல் உள்ள பற்றுதலை காட்டிலும், அழிவுக்குரிய அச்சத்தால் அவர்கள் தூண்டப்படுவார்கள். பெரிதான பரிசினை இழப்பார்கள். அவர்கள் இந்த பாபிலோனிலிருந்து நீக்கப்படுவதற்கு தங்களுடைய வஸ்திரங்களை ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்திலிருந்து தோய்த்து வெளுப்பதற்கான ஒரே வாய்ப்பை மட்டும் பெறுவார்கள். (வெளிப்படுத்தல் 7:14)

**மகா உபத்திரவம்**

மத்தேயு 24:21-22. "ஏனெனில், உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனி மேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும். அந்நாட்கள் குறைக்கப்படா திருந்தால், ஒருவனாகிலும் தப்பிப் போவதில்லை; தெரிந்துகொள்ளப் பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்."

புறஜாதியாரின் காலமான **2520** ஆண்டுகளின் முடிவு, நான்கு காற்றுகளின் தளர்ச்சி மற்றும் உபத்திரவ காலத்தின் துவக்கமாக இருந்தது. (R5752, Elijah's Flight and Vision., அப்போஸ்தலனாகிய பேதுருவின் இரண்டாம் நிருபம் )இது மனிதர்களின் பாரம்பரியத்தின் உபதேசங்களினால் ஜீவிக்க முயற்சிக்கும், தேவனுடைய ஆவிக்குரிய பிள்ளைகளுக்கு "விழிப்புணர்வான அழைப்பாகும்" - தேவனுடைய வார்த்தைகளில் கொடுக்கப்படும் தூய்மையான உணவுக்காக பட்டிணியாக இருக்கும் கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்கள். (R5478, பரலோகத் திலிருந்து வந்த சத்தம்)

புறஜாதியின் ஆட்சியினுடைய முடிவு, மனித வரலாற்றில் பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்திய, மிக பெரிய யுத்தத்தில் ஆரம்பிக்கப்பட்டு, இன்னும் அது முடிவடையவில்லை. உலகபோர்களின் படுகொலை மற்றும் அழிவைத் தொடர்ந்து கொதித்தெழுகிற சுயநலம் மற்றும் முன் சம்பவிக்காத, செறிவானசெல்வம், concentrated wealth; ஆகியவற்றுடன் பில்லியன் கணக்கான மனிதர்களிடையே மோசமான வறுமை மற்றும் நம்பிக்கையற்ற தன்மையும் வந்தது. ஆனால் தேவன் இவைகளுக்கு ஒரு எல்லையை வைத்திருக்கிறார், இவைகள் கிறிஸ்துவின் இராஜ்யத்தின் மத்தியஸ்த பகுதியின் துவக்கத்தில் முடிவடையும்

மத்தேயு 24:23-26. "அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில், கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கத் தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். இதோ, முன்னதாக

உங்களுக்கு அறிவித்திருக்கிறேன். ஆகையால்: அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால், புறப்படாதிருங்கள்; இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள்."

இது 4-5 வசனங்களை மறுபடியும் குறிப்பிடுவதாக தோன்றுகிறது. மேலும் அதற்குபின் சாத்தானின் கூடுதலான வஞ்சனைகளைப் பற்றி அவர் எச்சரிக்கிறார். அவனுடைய தலைசிறந்த மாபெரும் அந்திக்கிறிஸ்து அமைப்பு, கிறிஸ்துவின் சரீரத்தை தோற்கடிக்கப்பதில் வெற்றிபெறாததினால், சாத்தானின் கூடுதலான முறைகளைப் பற்றி தொடர்ந்து எச்சரிக்கப்படுகிறது. இயேசு ஒரு குறிப்பிட்ட நாட்டிலோ, பாலைவனத்திலோ, உடல் ரீதியாக திரும்புவார் என்று பலர் கூறலாம். பல பெயர் கிறிஸ்தவர்கள், 30ம் வசனத்தை தவறாக புரிந்துக் கொள்ளுதலினால், இயேசு வானத்தில் சரீரத்தில் தோன்றுவார் என்று நம்பிக்கொண்டு, ."அவர் மிகுந்த வல்லமையோடும், மகிமையோடும் வானத்தின் மேகத்தின் மேல் வருவார்" (மேகத்தில் எந்த ஒரு காரியமும் கண்களுக்கு புலப்படாதபோதிலும்) என்று எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மற்றொரு சக்திவாய்ந்த மோசடி ஆவியுலகம் ஆகும். அதாவது கிறிஸ்து வரும்போது அவரை நாம் தொடர்பு கொள்ளலாம் என்பதாகும். குறிப்பாக தேவனால் கண்டனம் செய்யப்பட்ட (உபாகமம் 18:10-12) மந்திரவாதிகள் மற்றும் ஊடகங்களினால் கட்டுப்படுத்தப்படும் "இரகசிய அறைகளில்" கிறிஸ்துவின் வருகையை மாம்ச கண்கள் காணும் என்றும், மாம்சமான காதுகள் கேட்கும் என்றும், இது முறையிடுகிறது. இது, வேதவாக்கியங்களின் மெய்யான செய்திகளுக்கு அல்ல, வஞ்சனைகளுக்கே வழிநடத்துகிறது. அவைகள் நம்பிக்கையை வாக்களித்தாலும், அழிவுக்கும், மரணத்திற்கும் இரையாகும்.

**பரோஷியாவின் பண்புகள்**

மத்தேயு 24:27. "மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்."

இந்த தீர்க்கதரிசனம் கிறிஸ்துவின் சரீரத்திற்கான செய்தியாகும். (இவர்கள் மட்டுமே 15ம் வசனத்தை "பார்க்கக்கூடியவர்கள்") இந்த ஒளி, இந்த அதிகபட்சமான வெளிச்சம், உண்மையுள்ள பரிசுத்தவான்களின் இருதயங்களிலும், சிந்தையிலும் மிக பிரகாசமாக வீசக்கூடிய சத்தியத்தின் ஒளியை அடையாளப்படுத்துகிறது. அவருடைய பிரசன்னத்தை உணர்ந்தவர்கள், அவரை சந்திக்கும்படி, "வெளியே சென்று," (மத்தேயு25:6) கிறிஸ்துவாக (எபேசியர் 4:13) அவர்கள் வளர்ச்சி அடைய, ஏற்ற கால சத்தியத்தினால் (மத்தேயு24:45) போஷிக்கப் பட்டு, பலன் அடைவார்கள். இந்த ஒளி அவர்களின் நெற்றிகளிலும், இருதயங்களிலும் முத்திரையிட வழிநடத்தும்.

41ம் வசனத்தின் முடிவாக, 28ம் வசனத்தை விவாதிக்க ரசல் விரும்பினார். (லூக்கா 17:36-37, D583 காண்க) 41ம் வசனம் "திரிகை அரைக்கிற இரண்டு பேர்களை பற்றி கூறுகிறது. மேலும் "உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிற படியினால் விழித்திருங்கள்." என்று 42ம் வசனத்திலும் தொடருகிறது. 27ம் வசனத்திற்கான பின்னணி, உலகத்திற்கு அல்ல, இது சபைக்கே உண்டான செய்தி என்று காட்டுகிறது. ஏனெனில் கவனிப்பதினால் உலகம் எதையும் பெறப்போவதில்லை. விழித்திருக்கும், விசுவாசமுள்ள மணவாட்டியே," இதோ மணவாளன்" என்ற நடுஇரவின் சத்தத்தை கேட்டு, அவரை சந்திக்க விரைந்தோடுவார்கள்.

மீண்டும் திரும்பிய ஆண்டவர், பரிசுத்தவான் களுக்கு கொடுத்த சத்தியம், அவர் திரும்புவதற்கு முன்பிருந்த இருளை காட்டிலும் அதிக பிரகாசமாக இருந்தது. பல விசுவாசிகளின் விசுவாசம் உண்மையாக நிகழ்வதினால், விசுவாசத்தை காட்டிலும், கண்களினால் கண்டு நடப்பதை போல அவர்கள் உணர்கிறார்கள். சூரியன் இருளை புறம்பாக்குவது போல (2பேதுரு 1:19) சத்தியத்தின் வெளிச்சம் "கிழக்கிலிருந்து மேற்கு வரையில்" (பரிசுத்தவான்களின் வாழ்க்கையின் எல்லா இடங்களிலும்) பிரகாசிப்பதாக விளக்கப்பட்டுள்ளது. பரிசுத்தவான்களுக்கு வழங்கப்படும் இந்த உண்மை ஒளியைப் பற்றி, ஆசரிப்புக் கூடாரத்தில் உள்ள பரிசுத்த ஸ்தலத்தில் சித்தரிக்கப்படுகிறது. அதில் கிறிஸ்துவின் சரிர அங்கத்தினர் மட்டுமே பிரவேசிப்பார்கள். அங்குள்ள குத்து விளக்காகிய தேவனுடைய வார்த்தைகளிலிருந்து பிரகாசிக்கும் இந்த ஒளி பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கும் சபைக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. "நீங்கள் இந்த உலகத்திற்கு ஒளியாக இருக்கிறீர்கள்" (மத்தேயு 5:14) பரிசுத்தவான்கள் தாங்கள் எந்த அளவுக்கு ஒளியைப் பெற்றிருக்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்கள் பெற்ற ஒளியை உலகத்தோடு பகிர்ந்து கொள்ளும் சிலாக்கியத்தை இப்போது, பெற்றிருக்கிறார்கள்.

மத்தேயு 24:28. "பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்." கிறிஸ்துவின் ஈடுபலியை மையமாகக் கொண்ட - தேவனுடைய திட்டத்தின் சத்தியமே இந்த பிணம். பல மொழிபெயர்ப்பாளர்கள் "பெருங்கழுகுகள்" பிணத்திற்கு அருகே வருகிறார்கள் என்று கூறுகிறார்கள். இந்த பெருங்கழுகுகள் பார்வைக்கு கழுகுகளை போல தோன்றினாலும், அவைகள் தங்களுடைய உணவுக்காக எதையும் கொல்லாமல், பிணத்தை உண்ணக்கூடியதாக உள்ளது. ஈடு பலியும் அதன் புரிந்துக்கொள்ளுதலும், தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு வழங்கப்பட்டது. அவர்கள் அதை தாமே திட்டமிடவும் இல்லை, ஆயத்தப்படுத்தவும் இல்லை. மாறாக, தேவனுடைய வார்த்தையில் தெளிவாக கற்பிக்கப்பட்டிருப்பதை கண்டார்கள். (1தீமோத்தேயு2:4-6) ஒவ்வொரு ஆய்விலும், ஒவ்வொரு கூடுகையிலும், பரிசுத்தவான்கள் கூடும் ஒவ்வொரு மாநாடுகளிலும், இந்த பிணமாகிய ஈடுபலியின் சத்தியம் காணப்படுகிறது. "மீட்கும்பொருளுக்குள் விசுவாசிகள் அனைவரையும் வரவேற்கிறோம்" என்று குறிப்பிடத்தக்க மாநாட்டு நிகழ்ச்சியின் போது வாழ்த்துதல் கூறப்படுகிறது. இங்கு "மீட்கும் பொருளைப் பற்றி பேசப்படுவதாக" நாம் கூறினால், பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள பரிசுத்தவான்களுக்கு, தேவனுடைய சத்தியம் பகிர்ந்துகொள்ளப்படுவது இதுவே.

**லூக்கா 21:20-24, வசனங்களில் உள்ள குறிப்பு**

**எருசலேமின் முற்றுகை**

ரோமுக்கு எதிரான யூத தீவிரவாத கலகம், சில மாதங்களுக்கு எருசலேமை முற்றுகையிட செஸ்டியஸ் கேலஸை (Cestius Gallus)தூண்டியது. பின்னர் வெஸ் போசியன் கலிலியைக் கைப்பற்றி முற்றுகையைத் திட்டமிட இருந்தது. (கிபி 68)ஆனால் நீரோ மன்னன் இறந்தான், ரோமாவில் குழப்பம் தொடர்ந்தது. ஆகவே வெஸ்பாசியன் ரோமாவுக்கு பேரரசராக ஆகுவதற்கு விரைந்தார். (68-69) இயேசுவின் வார்த்தைகள் (லூக்கா21:21 ) எருசலேமில் நடந்த உள்நாட்டு போர், கிறிஸ்தவர்களை பேலாவுக்கும், பேரேயா மற்றும் ஜோடான் முழுவதிற்கும், தப்பி ஓட தூண்டியது. பிறகு வெஸ்பாசியன் மகன் தீத்து, எருசலேமை முறியடிக்கத் திரும்பினார். (70 ஏப்ரல் - ஆகஸ்டு) நூற்றுக்கணக்கான பேர்கள் ஏற்கனவே இறந்த உடல்களாக சிலுவையில் அறையப்பட்டிருந்தனர், ஒரு மில்லியன் ஜனங்கள் கொல்லப்பட்டனர். (Josephus, Wars of the Jews, Books V and VI, and Eusebius, Historia Ecclesiastica III.5.3.)

எருசலேமின் முற்றுகை, சுவிசேஷ யுக அறுவடையோடு ஒத்திருப்பது தெளிவாக உள்ளது. உலக போர்கள் துவங்கும் முன் கிறிஸ்தவர்கள் பிரிவினை வாதத்திலிருந்து வெளியே அழைக்கப் பட்டார்கள். மத்தேயு 24:15. இந்த பிந்திய அறுவடையை அறிமுகப்படுத்துகிறது : பாழாக்கும் அருவருப்பை குறித்து தானியேல் தீர்க்கதரிசனம் உரைத்தார் (12:11), இது எருசலேம் அழிக்கப்பட்டு பல நூற்றாண்டுகளுக்கு பின் நடந்தது. பரிசுத்த ஸ்தலத்தில் ரோம் நிற்கும்போது, வெளியே வாருங்கள் என்ற கட்டளை பிறந்தது. (அதற்கு முன் அல்ல) இந்த வெளியேறுதல் எருசலேமிலிருந்து அல்ல யூதேயாவிலிருந்து வெளியேறும் படி கட்டளையிடப் பட்டது. (பாபிலோனின், பிரிவினை வாதங்களை அடையாளப் படுத்துவதாக தோன்றுகிறது), எருசலேமின் வீழ்ச்சியின் போது, வீட்டின் மேல் சரணடைந்திருந்தாலும், அது ஜனங்களை காப்பாற்றியிருக்காது. அதுபோல சுவிசேஷ யுக அறுவடையின் போது, பிரிவினைவாதத்தை சார்ந்திராத கிறிஸ்தவர்களை அடையாளப்படுத்துகிறது. இவ்வாறாக,மத்தேயு 24:16ல்" "(வெளிப்படுத்தல் 18:4) என்று அழைப்பு பிரதிபலிக்கிறது. அதேநேரத்தில் தப்பி ஓடும் நாம், "பாபிலோனை" பாதுகாக்கவும் கூடாது, அதை எதிர்க்கவும் கூடாது. அதற்கு மாறாக, "அனைவருக்காகவும் மரணத்தை ருசிப்பார்த்த" (எபிரெயர் 2:9) நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவினால், பாபிலோனில் சிறைப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிக்கவேண்டும்.

## மத்தேயு 24

15. மேலும், பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கக் கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது,

16. யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக் கடவர்கள்.

17. வீட்டின் மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காதிருக்கக் கடவன்.

18. வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்குத் திரும்பாதிருக்கக்கடவன்.

19. அந்நாட்களிலே கர்ப்பவதிகளுக்கும் பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ.

20. நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வு நாளிலாவது, சம்பவியாத படிக்கு வேண்டிக் கொள்ளுங்கள்.

21. ஏனெனில், உலக முண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனி மேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்.

22. அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப் போவதில்லை; தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்.

23.அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள்.

24. ஏனெனில், கள்ளக்கிறிஸ்து க்களும் கள்ளத்தீர்க்கதரிசி களும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்க தாகப் பெரிய அடையாளங் களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.

25. இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்.

26. ஆகையால்: அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால், புறப்படாதிருங்கள்; இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள்.

27. மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறது போல, மனுஷக் குமாரனுடைய வருகையும் இருக்கும்.

28. பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்.

## மாற்கு 13

14. மேலும் பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே; வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்; அது நிற்கத் தகாத இடத்திலே நீங்கள் அதை நிற்கக் காணும்போது, யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக் கடவர்கள்.

15. வீட்டின்மேல் இருக்கிறவன் தன்வீட்டுக்குள் இறங்காமலும், தன் வீட்டில் எதையாகிலும் எடுத்துக்கொள்ள உள்ளே போகாமலும் இருக்கக்கடவன்.

16. வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரத்தை எடுப்பதற்குப் பின்னிட்டுத் திரும்பாதிருக்கக்கடவன்.

17. அந்நாட்களிலே கர்ப்பவதிகளுக்கும் பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ!

18. நீங்கள் ஓடிப்போவது மாரி காலத்திலே சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள்.

19. ஏனெனில் தேவன் உலகத்தைச் சிருஷ்டித்தது முதல் இது வரைக்கும் சம்பவித்திராத தும், இனிமேலும் சம்பவியாதது மான உபத்திரவம் அந்நாட்களில் உண்டாயிருக்கும்.

20. கர்த்தர் அந்நாட்களைக் குறைத்திராவிட்டால், ஒருவனாகிலும் தப்பிப் போவதில்லை; தாம் தெரிந்துகொண்டவர்களினிமித்தமோ, அவர் அந்த நாட்களைக் குறைத்திருக் கிறார்.

21. அப்பொழுது: இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கேயிருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால், நம்பாதேயுங்கள்.

22. ஏனெனில் கள்ளக்கிறிஸ்துக் களும் கள்ளத்தீர்க்க தரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர் களையும் வஞ்சிக்கத் தக்கதாக அடையாளங் களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.

23. நீங்களோ எச்சரிக்கை யாயிருங்கள்; இதோ, எல்லாவற்றையும் முன்னதாக உங்களுக்கு அறிவித் திருக்கிறேன்.

## லூக்கா 21 & 17

19. உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்.

20. எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள்.

21. அப்பொழுது யூதேயாவிலிருக் கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகவும், எருசலேமிலிருக் கிறவர்கள் வெளியே புறப்படவும், நாட்டுப் புறங்களிலிருக்கிறவர்கள் நகரத்தில் பிரவேசியாமலிருக்கவும் கடவர்கள்.

22. எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும் படி நீதியைச் சரிக்கட்டும் நாட்கள் அவைகளே.

23. அந்நாட்களில் கர்ப்பவதி களுக்கும் பால்கொடுக்கிறவர் களுக்கும் ஐயோ, பூமியின்மேல் மிகுந்த இடுக்கணும் இந்த ஜனத்தின் மேல் கோபாக்கினையும் உண்டாகும்.

24. பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப் போவார்கள்; புற ஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புற ஜாதியாரால் மிதிக்கப்படும்.

### லூக்கா 17

22. அவர்கள் கலிலெயாவிலே சஞ்சரிக்கும்போது, இயேசு அவர்களை நோக்கி: மனுஷ குமாரன் மனுஷர் கைளில் ஒப்புக்கொடுக்கப்படுவார்.

23. அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள்: ஆகிலும் மூன்றாம் நாளிலே உயிர்த் தெழுந்திருப்பார் என்றார். அவர்கள் மிகுந்த துக்கமடைந்தார்கள்

24. அவர்கள் கப்பர்நகூமில் வந்த போது, வரிப்பணம் வாங்குகிறவர்கள் பேதுருவினிடத்தில் வந்து: உங்கள் போதகர் வரிப்பணம் செலுத்துகிறதில்லையா என்று கேட்டார்கள்: செலுத்துகிறார் என்றார்

இறுதி உபத்திரவங்கள் மத்தேயு 24:29-31

# வல்லமை மற்றும் மிகுந்த மகிமையோடு



"அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்." (மத்தேயு 24:30)

**David Rice**

மேலுள்ள வசனம், சுவிசேஷ யுகத்தின் தற்போதய அறுவடையின் இறுதி வேலையை குறிக்கிறது. 1874 ல் அறுவடை துவங்கினதிலிருந்து, கிறிஸ்து இருக்கிறார், (ஆனால் இந்த காலபகுதியின் முடிவில் மட்டுமே தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் யுகங்களின் மாற்றததில் தெய்வீக உறுதிப்பாட்டின் கையை, அங்கீகரிக்க உலகை தூண்டுவதற்கு போதுமானதாக இருக்கும். மத்தேயு 24:30 இக்காலத்தை குறிக்கிறது.

"பரலோகத்தில் மனுஷகுமாரனின் அடையாளத்தை, அவருடைய பிரசன்னம் (பரோஷியா) என்று நாம் கூறமுடியாது. அதற்கு எதிராக, கிறிஸ்துவின் பரோஷியா கோத்திரங்களுக்கும், குடும்பங்களுக்கும் அல்லது பொதுவாக உலகத்திற்கும் அறிவிக்கப்படாமல், கிறிஸ்துவின் சபையின் பரிசுத்தவான்களுக்கு மட்டுமே அறிவிக்கப்பட்டது. இதன் விளைவாக, இந்த முழு உலகத்தின் மனுக்குலம் புரிந்துக்கொள்ளும்படியாக, மனுஷ குமாரனுடைய அடையாளம், ஏதோ ஒரு வகையில் அவருடைய எபிபானியாவோடு அல்லது மிகுந்த பிரகாசத்தில் நியாயத்தீர்ப்பின் "எரியும் அக்கினியில்" தொடர்புள்ளதாக இருக்க வேண்டும். (2தெசலோனிக்கேயர்) (Sermon Book, "The Sign of the Son of Man in Heaven," page 420).

சில நேரங்களில் நாம் அப்போகாலிப்ஸிஸ் என்ற வார்த்தையை பயன்படுத்துகிறோம். இதற்கு வெளிப்படுத்தல் என்று பொருள். இது கிறிஸ்துவின் இராஜ்யத்திற்குள் நம்மை வழிநடத்தும், அறுவடையின் முடிவான அனுபவத்தை குறிப்பிடுகிறது. மத்தேயு 24:29-30 வசனங்கள் இந்த காலபகுதிக்கு பொருத்தப் படுகிறது. 31ம் வசனம் சற்று பின்னோக்குகிறது, அதை நாம் மேலும் விவாதிப்போம்.

### ஒரு பார்வை

இயேசுவின் சொற்பொழிவில், மூன்று பரந்த பகுதிகள் உள்ளன, சில நேரங்களில் அது "ஆண்டவரின் மகத்தான தீர்க்கதரிசனம்" என்று அழைக்கப்படுகிறது. சீஷர்களின் கேள்விகளுக்கு, பின் அதற்கு பதில் அளிக்கும் படியாக இந்த தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. (1) அவர்களின் கேள்விகளுக்கு 4-31 வசனங்களில் இயேசு பதில் அளித்தார், (2) அந்த பதில்களில் மூன்று பாடங்கள் -வசனங்கள் 32-51 வரையில் மற்றும் (3)மத்தேயு 25ல், அந்த பாடத்திற்கு தொடர்புடைய மூன்று உவமைகள்.

ஒவ்வொரு பகுதிகளுக்குள்ளும் மூன்று துணைபாகங்கள் உள்ளன. முதல் பகுதியில் (அ) "முடிவுக்கு" முன் நிகழவேண்டியவைகள், (ஆ) "முடிவின்" போது நிகழக்கூடியவைகள் மற்றும் (இ) "முடிவின்" உச்சக்கட்டத்தில் நிகழக்கூடியவைகள். 3ம் வசனத்தில், "இந்த உலகத்தின் முடிவைப் பற்றி" அல்லது மிக துல்லியமாக, யுகத்தின் (*aionos*)முடிவு காலத்தை (*sunteleias*)குறித்து சீஷர்கள் இயேசுவிடம் கேட்டார்கள். அவர்களுக்கு பதில் அளிக்கும்படியாக, அறுவடைக்கு முன்னால் எதிர்ப்பார்க்கப்படும் காரியங்கள், அறுவடை காலத்தில் நிகழும் காரியங்கள் மற்றும் அறுவடையை நிறைவு செய்யும் காரியங்கள், புதிய இராஜாவின் பிரசன்னத்தை உலகிற்கு அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றை அவர் எடுத்துரைத்தார்.

### இரட்டை அர்த்தம்

14-28ம் வசனங்களில் யுகத்தின் முடிவைப் பற்றி இயேசு சீஷர்களிடம் பேசினபோது, அவர் கிபி 66ல் இருந்து ரோமர்கள் யூதேயாவின் மீது வெற்றிப்பெறும் காரியத்தோடு எளிதாக தொடர்புடைய வார்த்தைகளை பயன்படுத்தினார். ஆயினும், பெரும்பாலான கிறிஸ்தவர்கள் புரிந்திருக்கிறபடி, யூத யுகத்தின் முடிவைப் பற்றி இவ்வாறாக விவரிக்கப்பட்டிருக்கும் காரியமானது, சுவிசேஷ யுகத்தின் முடிவில் இன்னும் விரிவான நிறைவேற்றத்தை கொண்டிருக்கிறது.

யூத யுகத்தின் முடிவான அனுபவங்களைப் பற்றி இயேசுவின் வார்த்தைகள் எவ்வாறு பொறுத்தப்பட்டது என்பதை புரிந்துக்கொண்டால், சுவிசேஷ யுகத்தின் முடிவில் இன்னும் விரிவான நிறைவேற்றத்தை அதிகமாக புரிந்துக்கொள்வதற்கு உதவியாக இருக்கும். எனவே, நாங்கள் இரண்டின் கருத்துக்களையும் தெரிவிக்கிறோம்.

### உச்சக்கட்டம்

வசனம் 29. "அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன்

ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்."

இந்த பகுதி சில முந்தைய "உபத்திரவத்தை" தொடர்ந்த விஷயங்களை விவரிக்கிறது. 21ம் வசனம் அதே வார்த்தையை பயன்படுத்தி, இந்த உபத்திரவத்தைப் பற்றி பேசுகிறது. பரிசுத்தவான்கள் "யூதேயாவை" விட்டு விரைந்து செல்லும்போது, என்று 21 ம் வசனம் கூறுகிறது - முதல் முறை கிபி 66 முதல் துவங்கியது, இரண்டாவது முறை பெயரளவிலான கிறிஸ்தவ மண்டலத்திலிருந்து விரைந்தோடுவது 1874 முதல் துவங்கியது - இந்த காலம் துயரமான மற்றும் "மகா உபத்திரவத்தின் காலமாக" இருக்கவேண்டும். இந்த இரண்டு விஷயத்திலும், இது உண்மையானது. (பிந்தைய விஷயத்தில், சற்று பெரிய அளவில் நடந்தது)

நம்முடைய கவனத்தை சுவிசேஷ யுகத்தின் முடிவுக்கு சுருக்கிக் கொண்டு வருகையில், முன்னெப் போதும் கண்டிராத அளவில் உபத்திரவங்களை காண்கிறோம். "உபத்தரவ காலத்திற்கு" மூன்று விரிவான கட்டங்கள் அல்லது பகுதிகள் உண்டு. இவைகள் 1இராஜாக்கள் 19:11,12ல் எலியாவின் தரிசனத்தில், காற்றாகவும், பூமி அதிர்ச்சியாகவும், அக்கினியாகவும் அடையாளப்படுத்தப்படுகிறது. "காற்றுகள்", I மற்றும் II போர்களை உள்ளடக்கும். ஒரு பூமி அதிர்ச்சி அதை தொடர்ந்தது. ஐரோப்பிய காலனித்துவ சக்திகள் முறிக்கப்பட்டது. அது 1989 ல் சோவியத் ஒன்றியத்தின் முறிவின் உச்சத்தை அடையச் செய்தது. (புட் நோட் 2) அதை தொடர்ந்து இஸ்லாமிய கிளர்ச்சியின் "தீ" கொழுந்து விட்டது. ஆகஸ்ட் மாதம், ஈராக்கின் குவைத் படையெடுப்பு 1990 முதல் வளைகுடா போரை வீழ்த்தியது, மற்றும் இஸ்லாமிய கொந்தளிப்புகள் எப்போதும் தொடர்ந்துக் கொண்டே இருக்கிறது.

ஆயினும் 29ம் வசனம், இந்த காலப்பகுதியின் ஒரு உயர்வான நிலையைப் பற்றி பேசுகிறது. "மிகுந்த உபத்திரவத்தின்" காலப் பகுதிக்கு பின் "உடனடியாக" இறுதி அழிவை நோக்கி, காரியங்கள் இன்னும் மோசமாகிவிடும். முந்தி நீட்டிக்கப்பட்ட மற்றும் இடைவிடாத உபத்திரவத்தைத் தொடர்ந்து, சூரியனும் சந்திரனும் இருளாகிவிடும், வானத்தில் உள்ள நட்சத்திரங்கள் பூமியின் மேல் விழும், பரலோகத்தில் ஆவிக்குரிய கட்டுப்பாடு இழக்கப்படும். இது அரசியல் மற்றும் மதத்தின் முழு அமைப்பின் கட்டுப்பாட்டின் அழிவை, இந்த தீவிரமான அடையாளங்கள் குறிப்பிடுகிறது. பூர்வ காலங்களில் பாபிலோன் வீழ்ச்சி பற்றி ஏசாயாவில் கொடுக்கப்பட்டுள்ள இதே போன்று விவரங்களை கவனியுங்கள்:" (ஏசாயா13:10). இந்த தீர்க்கதரிசன மொழி, முழுமையாக இருக்கும் ஒரு ஒழுங்கான காரியங்களின் சரிவை விவரிக்கிறது. நம்முடைய நாளில், வெளிப்படுத்தலின் ஏழாம் வாதை , அதாவது, அர்மகெதோன் மற்றும் தொடர்ந்து வரும் காரியங்களை பொருள் படுத்துகிறது. இந்த கடைசி நிகழ்வுகள் மற்றும் துயரங்கள், கிறிஸ்துவின் கீழ் ஒரு புதிய ஒழுங்கான உலகின் பிறப்பை ஏற்படுத்தும். (வெளிப்படுத்தல் 16:16-21) இயேசுவை கண்டனம் செய்த இஸ்ரயேலின் தலைவர்கள், அவரை தேவனுடைய குமாரனா என்று வலியுறுத்தி கேட்ட போது," "(மத்தேயு 26:64)" என்று அவர்களுக்கு அவர் பதில் அளித்தார்.

ரோமர்கள் சுவர்களை உடைத்து, யூத அரசியல் வீழ்ந்தபோது, அப்போது வாழ்ந்தவர்களில் சிலர் எருசலேமுக்கு எதிராக கொடுக்கப்பட்ட நியாயத்தீர்ப்பின் நிறைவேற்றத்தை கண்டிருப்பார்கள். அவர்களது இயல்பான செயல்பாடுகளை நிறுத்திய சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களின் தீவிரமான அடையாளங்கள் அப்போது பொறுத்தப்பட்டது --மேலும் அவைகள் மீண்டும் அறுவடையின் முடிவில் பயன்படுத்தப்படும்.

வசனம் 30 ."அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்."

கி.பி 70ல் எருசலேமின் அழிவில், அவரையும் அவருடைய வல்லமையையும் யூத ஜனங்கள் கண்டதை போல, இப்பொழுது இந்த உலகம் அவருடைய தெய்வீக வல்லமையின் தலையீட்டின் வழியாக இயேசுவை "காண்பார்கள்". இங்கு "காண்பார்கள்" என்ற வார்த்தையானது நமது மன கண்களால் புரிந்துக் கொள்வதை பொருள்படுத்துகிறது. எப்போது எனில், சான்றுகள் மற்றம் கலந்துரையாடல்களுக்குப் பிறகு, நாம் "கருத்தைக்காணும் போது" என்று நாம் கூறுகிறோம். ""என்று இயேசு 12:45 ல் கூறினார். ஆம், "ஒருவரும் தேவனை ஒரு காலமும் கண்டதில்லை" (யோவான் 1:18) இயேசுவை மகிமையோடு, அவருடைய தெய்வீக தலையீட்டை அடையாளம் கண்டுகொண்ட உலகம், அவருடைய வல்லமையையும் மகிமையையும் காண்பார்கள்.

"வானத்தின் மேகங்கள்", நமக்கு "அப்பொழுது வெவ்வேறு ரூபமுள்ள நாலு பெரிய மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து எழும்பின." (தானியேல் 7:13) யை நினைப்பூட்டுகிறது. ஆவிக்குரிய ஆட்சியில் ஈரப்பதமான மேகங்கள் இல்லை. கலவர நிகழ்வுகளுக்கு, மேகம் கூட்டப்படுவதை இந்த அடையாளம் தெளிவாக ஒப்பிடுகிறது மேலும், இதை பின் தொடர்ந்து மழையும் எதிர்ப்பார்க்கப்படுகிறது, இதனால் புயலுக்கு பின் ஆசீர்வாதம் கிடைக்கும்.

புதிய இராஜாவின் கட்டளையிடப்பட்ட மகத்தான சக்திகளில், வல்லமையும், மிகுந்த மகிமையும் வெளிப்படும். இத்தருணத்தை மற்ற சக்திவாய்ந்த அடையாளங்களுடன் (வெளிப்படுத்தல் 19:11-14) ம் வசனங்கள் விவரிக்கிறது." பின்பு பரலோகம் திறந்திருக்க கண்டேன் ஒரு வெள்ளை குதிரை காணப்பட்டது. அதின் மேல் ஏறி இருந்தவர் சத்தியமுள்ளவர் எண்ணப்பட்டார். அவர் நீதியாய் நியாந்தீர்த்து... சிரசின் மேல் கிரீடங்கள் இருந்தன... பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரம் தரித்தவர்கள் வெள்ளை குதிரைகளின் மேல் ஏறி அவருக்கு பின் சென்றார்கள்" இந்த சமயத்தில் "பூமியில் உள்ள சகல கோத்திரங்கள் துக்கிப்பார்கள்" என்று இயேசு கூறினார். எருசலேமின் அழிவு நெருங்கி வருவதால், ஏற்படும் நடுக்கத்தின் நிமித்தம், இஸ்ரயேலின் அனைத்து கோத்திரங்களும், ஜனங்களும் கவலையோடு இருப்பார்கள். இதை பெரிய அளவில் இன்று காணும்போது, இறுதியான உபத்திரவம் உச்சக்கட்டத்தை அடையும் போது சகல ஜாதிகளும், வியாகுலம் அடைந்தவர்களாக இருப்பார்கள்.

வசனம் 31. "வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்."

இந்த வசனத்தின் நிறைவேற்றத்தைப் புரிந்துகொள்வதற்கு, யூத யுகத்தின் முடிவில் இது எவ்வாறு பொருந்தியது என்பதை நாம் சிந்திக்கலாம். கி.பி 66ல் எருசலேமுக்கு எதிராக ரோமானிய படைகள் முற்றுகையிட்டபோது, "எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள்." (லூக்கா21:20) என்று இயேசுவினால் எச்சரிக்கப்பட்ட காரியங்கள் வந்தது. யூத யுகத்தின் அறுவடையின் இறுதி அனுபவங்கள் அவர்களின் மேல் இருந்தது.

இவைகளை நீங்கள் காணும்போது, "அப்பொழுது யூதேயாவிலிருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகவும், எருசலேமிலிருக்கிறவர்கள் வெளியே புறப்படவும், நாட்டுப்புறங்களிலிருக்கிறவர்கள் நகரத்தில் பிரவேசியாமலிருக்கவும் கடவர்கள். எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும்படி நீதியைச் சரிக்கட்டும் நாட்கள் அவைகளே." (லூக்கா 21:21, 22) என்று இயேசு கூறினார். (31ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தெரிந்துக்கொள்பவர்களின் கூட்டிச் சேர்க்கப்படுதல், இயேசுவின் எச்சரிப்புக்கு செவிசாய்க்கும். 31 வது வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தெரிந்து கொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்த்தல் என்பது, யூத கிறிஸ்தவர்கள் எருசலேமிலிருந்து தப்பி, இயேசுவின் எச்சரிக்கையை கவனித்து சிதறடிக்கப்பட்ட ஒரு கூட்டத்தில் இருந்து சேர்க்கப்பட்ட கூட்டமாகும். 31ம் வசனத்தின் விரிவான நிறைவேற்றம், அறுவடையின் போது தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை கூட்டிசேர்ப்பதை குறிக்கிறது. இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் நமக்கு இது விசேஷித்த ஆர்வத்திற்குரியதாக உள்ளது. சுவிசேஷ யுகத்தின் அறுவடையின் போது, பாபிலோனின் பொய்யான போதனைகள் மற்றும் அதன் தப்பான பழக்கவழக்கங்கள் புரிந்துக்கொள்ளப்பட்டதினால், பரிசுத்தவான்கள் அந்த பாபிலோனை விட்டு வெளியே வருவதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள். அவர்கள் கிறிஸ்தவ மணடலத்திலிருந்து (ஆவிக்குரிய யூதேயா, ஆவிக்குரிய பாபிலோன்) தப்பி ஓடுகையில், தேவன் அவர்களை ஆவிக்குரிய விதத்தில் பராமரித்து கூட்டிசேர்ப்பார்.

இந்த கூடுகை, 30ம் வசனத்தில் சொல்லப்பட்ட கிறிஸ்துவின் அப்போகாலிப்ஸை தொடராது. மாறாக, சீஷர்களின் கேள்விகளுக்கு இயேசு கொடுத்த பதிலின் முடிவை பார்க்கையில், இது பரிசுத்தவான்களுக்கு தேவனுடைய கவனிப்பு மற்றும் அறுவடையின் காலத்தில் அவருடைய பராமரிப்புக்கும் உத்தரவாதம் அளிக்கிறது.

பரிசுத்தவான்கள் "அந்த நான்கு காற்று களிலிருந்து" கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள், அதாவது கிறிஸ்தவ மண்டலத்தில் அவர்களது முன்னால் சிதறடித்தலை, நான்கு காற்றுகளாக சிதறடிக்கப் பட்டதாக அடையாளமாக விவரிக்கப்படுகிறது. "ஓகோ, நீங்கள் எழும்பி வடதேசத்திலிருந்து ஓடிவாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஆகாயத்து நான்கு திசைகளிலும் உங்களை நான் சிதறப்பண்ணினேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (சகரியா2:6) அதேபோல

இந்த சிதறடிப்பிலிருந்து ""பரிசுத்தவான்கள் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் என்று மத்தேயு 24:31ம் வசனத்திலும் சொல்லப்படுகிறது.

31ம் வசனம் ஒரு "எக்காளத்தை" பற்றி பேசுகிறது. இது பரிசுத்தவான்களை கூட்டிச் சேர்க்கும் படியாக ஒலிக்கும் சத்தியத்தின் ஒரு எக்காளம் என்று கருதப்படுகிறது. கிறிஸ்துவின் வருகையைப் பற்றியும், அறுவடையின் துவக்கத்தைப் பற்றியும், இதே அடையாளம் 1தெசலோனிக்கேயர் 4:16 ம் வசனத்திலும் காணப்படுகிறது.


பெயர் கிறிஸ்தவ மண்டலமாகிய ஆவிக்குரிய "யூதேயாவிலிருந்து" விரைந்தோடும் பரிசுத்தவான்களை, சத்தியத்தின் எக்காளம் கூட்டிசேர்த்து, தேவனுடைய இராஜ்யமாகிய "பர்வதத்திற்கு" நேராக வழிநடத்துகிறது. (மத்தேயு24:16, சங்கீதம் 125:2) இந்த உலகின் மேல் அர்மகதோன் வரும்போது, அனைத்து பரிசுத்தவான்களும் வீட்டிற்குள் கூட்டிச் சேர்க்கப் பட்டிருப்பார்கள். "இந்தக்கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும். அல்லேலூயா" (சங்கீதம் 149:9)

(3) பதிப்பாசிரியரின் குறிப்பு: அல்லது, அந்த அடையாளம் அதாவது பூமிக்குரிய உயிர்த்தெழுதலின் துவக்கத்தில், இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதை நினைத்து சகல தேசங்களும் துக்கிப்பார்கள், சகரியா12:10 (இருப்பினும், 2தெசலோனிக்கேயர் 1:7,8 ல் பவுல் அடையாளமாக வெளிப்படுத்துவது போல "எரிகிற அக்கினியில்" இயேசு வெளிப்பட்டார். ஆகவே அறுவடையின் இறுதியான உபத்திரவ காலமாக இந்த "அடையாளம்" இருக்கும் என்று ஆசிரியர் கருதுகிறார்.)

| **மத்தேயு 24** | **மாற்கு 13** | **லூக்கா 21** |
|---|---|---|
| 29. அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக்கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்.<br>30. அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். | 24. அந்நாட்களிலே, அந்த உபத்திரவத்திற்குப் பின்பு, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும்;<br>25. வானத்தின் நட்சத்திரங்கள் விழும், வானங்களிலுள்ள சத்துவங்களும் அசைக்கப்படும்.<br>26. அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின் மேல் வருகிறதைக் காண்பார்கள்.<br>27. அப்பொழுது அவர் தம்முடைய தூதரை அனுப்பி: தாம் தெரிந்து கொண்ட வர்களைப் பூமியின் கடை முனை முதற்கொண்டு, வானத்தின் கடைமுனை மட்டுமுள்ள நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார். | 25. சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் முழக்கமா யிருக்கும்.<br>26. வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆதலால் பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக் கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்.<br>27. அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருகிறதைக் காண்பார்கள்.<br>28. இவைகள் சம்பவிக்கத் தொடங்கும் போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்துபார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள் என்றார். |

மத்தேயு 24-32-44

# அத்திமரத்தின் உவமை



"நான் இவ்விடத்திலிருந்து, கல்தேயர் தேசத்துக்குச் சிறைப்பட்டுப் போகவிட்ட யூதரை நான் இந்த நல்ல அத்திப்பழங்களுக்கு ஒப்பிட்டு, அவர்களுக்கு நன்மையுண்டாக அவர்களை அங்கிகரிப்பேன்." (எரேமியா 24:5)

***Mark Davis***

அத்தி மரத்திலிருந்து ஒரு உவமையை கற்றுக்கொள்ளுங்கள் - அதனுடைய கிளைகள் துளிர் விட்டு, இலைகள் முளைக்கும் போது, கோடை காலம் சமீபத்தில் இருக்கிறதென்று அறிவீர்கள்" நம்முடைய ஆண்டவர், அவருடைய பூமிக்குரிய ஊழியத்தின் கடைசி வாரத்தில் இந்த உவமையைச் சொன்னார். இது அவர் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த மகத்தான தீர்க்கதரிசனத்தின் பகுதியாக உள்ளது. தேவனுடைய இராஜ்யத்திற்கு முந்தி நடக்கவேண்டியவைகளை வெளிப்படுத்துவதற்கு, இந்த "அத்தி மரத்தின்" சின்னத்தை, அவர் சொன்ன அடையாளங்களில் ஒன்றாக பயன்படுத்தினார். வரக்கூடிய நாளைப் பற்றி அவர் கூறுகையில், "அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்" என்றார். (மத்தேயு 24:33 , லூக்கா 21:29,30,31)

தீர்க்கதரிசிகள் இஸ்ரயேல் தேசத்தாரை அத்திப்பழங்களோடு ஒப்பிட்டார்கள். "வனாந்தரத்தில் திராட்சக்குலைகளைக் கண்டுபிடிப்பதுபோல இஸ்ரவேலைக் கண்டுபிடித்தேன்; அத்திமரத்தில் முதல்தரம் பழுத்த கனிகளைப்போல உங்கள் பிதாக்களைக் கண்டுபிடித்தேன்; ஆனாலும் அவர்கள் பாகால்பேயோர் அண்டைக்குப்போய், இலச்சை யானதற்குத் தங்களை ஒப்புவித்து, தாங்கள் நேசித்தவைகளைப் போலத் தாங்களும் அருவருப்புள்ளவர்களானார்கள்." (ஓசியா 9:10)

சிறை பிடிக்கப்பட்ட இஸ்ரயேலர்களுக்கு எரேமியா ஆறுதல்படுத்துகிறார், "நான் இவ்விடத்திலிருந்து, கல்தேயர் தேசத்துக்குச் சிறைப்பட்டுப் போகவிட்ட யூதரை நான் இந்த நல்ல அத்திப்பழங்களுக்கு ஒப்பிட்டு, அவர்களுக்கு நன்மையுண்டாக அவர்களை அங்கிகரிப்பேன். அவர்களுக்கு நன்மையுண்டாக நான் என் கண்களை அவர்கள்மேல் வைத்து, அவர்களை இந்த தேசத்துக்குத் திரும்பிவரப்பண்ணி, அவர்களைக் கட்டுவேன், அவர்களை இடிக்கமாட்டேன், அவர்களை நாட்டுவேன், அவர்களைப் பிடுங்கமாட்டேன். நான் கர்த்தர் என்று அறியும் இருதயத்தை அவர்களுக்குக் கொடுப்பேன்; அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்; அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்திற்குத் திரும்புவார்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமியா 24:5-7) இருதயங்கள் மாற்றப்பட்டவர்களாக தங்களுடைய தேசத்திற்கு திரும்பிய யூத ஜனங்களுக்கு, இந்த "நல்ல அத்தி பழங்கள்" அடையாளப்படுத்தப்படுகிறது. இவர்கள் இனி ஒருபோதும் பிடுங்கப்படுவதில்லை.

நூற்றுக்கணக்கான வருடங்கள் கழித்து, நம்முடைய ஆண்டவரின் பூமிக்குரிய வாழ்க்கையின் கடைசி வாரத்திலும் கூட, இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறவில்லை. கிபி 70ல் ஆலயம் அழிக்கப்பட்டது. ஒரு கல்லின் மேல் ஒரு கல் இருக்கவில்லை. தப்பிப் பிழைத்த யூத ஜனங்கள், தங்களுடைய சொந்த தேசத்திலிருந்து விரட்டப்பட்டு, மற்ற தேசங்களுக்குள் சிதறடிக்கப்பட்டார்கள்.

கனியற்ற அத்திமரமாக ஆண்டவர், யூதாஸையும் அடையாளப்படுத்தினார். (மாற்கு11:12-14, 20-21 ) ஆயினும், ஆமோஸ் கூறுகிறபடி, சிதறடிக்கப்பட்ட ஜனங்களின் மேல் இது இறுதி தீர்ப்பாக இருக்கவில்லை. "ஏதோமில் மீதியானவர்களையும், என் நாமம் விளங்கிய சகல ஜாதிகளையும் வசமாக்கிக்கொள்ளும் படிக்கு, என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்; அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப் படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார்."(ஆமோஸ் 9:11,14-15)

நம்முடைய தற்போதைய நாளின் போது, மத்தேயு 24:34வில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த "தலைமுறை", ஒரு இனத்தை அல்ல, மாறாக இஸ்ரயேலின் நாட்டில் மீண்டும் கூட்டிச் சேர்க்கப்பட்டவர்களோடு வாழ்ந்து வரும் தற்காலிகமான ஜனங்களை குறிப்பிடுகிறது. இது ஒரு இனத்தை குறிக்கவில்லை, மாறாக, மீண்டும் கூடியிருந்த இஸ்ரேல் தேசத்துடன் சமகாலத்தில் வாழும் ஜனங்களைக் குறிக்கிறது. அவர்கள் தான் அந்த நாடு "துளிர்விடும்போது," நேரிடையாகக்கண்டனர்.

வரலாற்றில், 1878 ம் ஆண்டை பின்னிட்டு பார்க்கும்போது, பெர்லின் தேசிய மாநாட்டில், யூத குடியேற்றத்திற்கு பாலஸ்தீன நாட்டின் நிலத்தை திறந்து வைத்தபோது, இந்த இலைகள் துளிர் விடும்

அடையாளத்தை கண்டோம். அந்த ஆண்டில் முதல் யூத குடியிருப்பாக, பெட்டா டிக்கவா (Petah Tikvah)இயக்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இதிலிருந்து முதல் குடியேற்றம் (அலியா "aliya") துவங்கியது.

1896 ஆம் ஆண்டில் சீயோன் இயக்கத்தின் தந்தையாகிய வியன்னாவின் தியோடர் ஹெர்ஸல், " The Jewish State " என்ற அவருடைய புத்தகத்தில், பாலஸ்தீனத்தில் ஒரு யூத தாய்நாட்டை நிறுவும்படியாக அழைப்பு விடுத்தார். அதை தொடர்ந்து வந்த வருடத்தில், "எரேட்ஸ் (Eretz) ல் உள்ள யூத ஜனங்களுக்கு ஒரு வீட்டை ஸ்தாபிக்க சீயோன் இயக்கம் முயன்றது - பொது சட்டத்தின் கீழ் இஸ்ரயேல்" என்ற பிரகடனத்தை முதல் சீயோன் காங்கிரஸ் அறிவித்தது.

1917 ஆம் ஆண்டில் முதலாம் உலக போரின் முடிவில், பிரிட்டனின் அரசாங்கம் பால்ஸ்ஃபோர் பிரகடனத்தை வெளியிட்டது. அது பாலஸ்தீனத்தில் ஒரு யூத அரசை நிறுவுவதற்கு ஆதரவாக தன்னுடைய இங்கிலாந்தின் மாட்சிமையில் பதிவு செய்தது.

இறுதியாக, 1948, மே 14ம் தேதி அன்று, இஸ்ரயேல் அரசு சுதந்திரம் பெற்ற நாடாக அறிவிக்கப்பட்டது. அதை தொடர்ந்து வந்த வருடம் 1949 மே மாதம் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் 273 தீர்மானத்தின் கீழ், முறையான அங்கீகரிப்பை ஒப்புக்கொண்டது. இவ்வாறாக, சீரான முற்போக்கு நடவடிக்கைகளின் வழியாக,தேவனால் வாக்களிக்கப்பட்ட ஸ்தலத்தை தேசங்கள் மத்தியில் மீண்டும் இஸ்ரயேல் பெற்றுக்கொண்டது. இது நம் கண்களுக்கு முன்பாக நிறைவேறிய அற்புதமான ஒரு தீர்க்கதரிசனமாகும் - "அத்திமரம் துளிர் விட்டது". நம்முடைய ஆண்டவர் முன்னதாகவே மத்தேயு24:32ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தின்படி, இது நம்முடைய ஆண்டவரின் இரண்டாம் பிரசன்னத்தின் அடையாளமாக குறிப்பிடப்படுகிறது. (இரண்டாம் உலக போருக்கு பின் டஜன் கணக்கான நாடுகள் சுதந்திரம் பெற்றதை "மற்ற அனைத்து மரங்களையும்.." என்று லூக்கா சுவிசேஷம் கூடுதலான தகவலைத் தருகிறது. )

ஆனாலும், இஸ்ரயேல் எருசலேமிலிருந்து ஆட்சி செய்யும் உரிமை பெற்றிருப்பதை அங்கீகரிப்பதற்கு இந்த உலகத்தின் தேசங்கள் மிகவும் தாமதிக்கிறார்கள். இந்த தேசம் முதன் முதலில் நிறுவப்பட்டு, எருசலேமை இஸ்ரயேலின் வம்சவழியாக வந்த தலைநகரம் என்று முறையாக அங்கீகரிப்பதற்கு, சுமார் எழுபது வருடங்கள் ஆனது. தேவனுடைய இராஜ்யம் மிக சமீபத்தில் இருப்பதை, இன்னும் "வாசலில் நிற்பதை" , அத்திமரத்தின் இந்த ஜீவனுள்ள அடையாளங்கள் அனைத்தும் நமக்கு மிகுந்த நம்பிக்கையை அளிக்கிறது. அவருடைய கால கடிகாரம், அவருடைய கட்டளையின்படி, முன்னோக்கி கடிகாரம் நகர்கிறது.

மாம்ச இஸ்ரயேலின் மீது கிபி 70ல் வந்த பேரழிவை குறித்து, "வானங்களும் பூமியும்" (வசனம் 35) என்று குறிப்பிடப்பட்டிருப்பதாக சிலர் நினைத்தனர், ஆனால் "இராஜ்யத்தின் இந்த சுவிசேஷம் இந்த பூமி எங்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்படும் அப்போது முடிவு வரும்" என்று நம்முடைய ஆண்டவர் கூறியிருக்கிறார். (மத்தேயு24:14) இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் "வானங்கள் மற்றும் பூமி" தற்போதைய காரியங்களின் ஒழுங்கைப் பற்றியது. தற்போதுள்ள "ஆவிக்குரிய அதிகாரங்களும், சமுதாய ஒழுங்குகளும்" ஒழிந்துபோகும், ஆனால் என்னுடைய வார்த்தைகள் ஒருபோதும் ஒழிந்து போகாது."

நம்முடைய ஆண்டவரின் முதலாம் வருகையின் போது, இராஜ்யத்தின் ஆயத்தத்திற்கு நிகழக்கூடிய சம்பவங்களை எப்போது வெளிப்படும் என்று காலங்களை குறித்து அவர் அறிந்திருக்கவில்லை. அந்த காலத்தைக் குறித்து பிதா ஒருவரை தவிர, குமாரனும் அறியார், என்று அவர் கூறினார். (வசனம் 36) இப்போது தேவனுடைய வலது பக்கத்தில் அமர்ந்திருக்கும் அவருக்கு, பிதாவினால் சகலமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் என்று நாம் நம்புகிறோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் புரிந்துகொள்வதற்கு கொடுக்கப்பட்ட காலப்பகுதி : "புறஜாதியின் நிறைவு வரும் வரையில், இஸ்ரயேலின் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்" (ரோமர் 11:25) அவர்களின் அவிசுவாசத்தினாலே, நம்முடைய ஆண்டவரோடு ஆட்சி செய்வதற்கு அழைக்கப்பட்டு, தெரிந்துக் கொள்ளப்படுவதற்கு, யூதர்களுக்கு மட்டும் அல்ல, புறஜாதிகளுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டது. இந்த முதலாம் உயிர்த்தெழுதலே, இயேசுவை பின்பற்றுபவர்களுக்கான ஆவிக்குரிய நம்பிக்கையாக உள்ளது. இந்த யுகத்தின் முடிவு வரையில், இந்த ஒரு நம்பிக்கையே, அவருடைய சீஷர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் இராஜ்யத்தில், மரித்தோரின் பொதுவான உயிர்த்தெழுதலில், தேவனுக்கு இசைவாக, இஸ்ரயேலை சீரமைப்பதோடு மட்டும் அல்ல இந்த முழு உலகத்தையும் சீரமைக்கக்கூடிய வேலையில் பங்கெடுப்பதே இந்த நம்பிக்கையாம். வரக்கூடிய தேவனுடைய இராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டும் என்பதே நம்முடைய ஆண்டவர் சீஷர்களுக்கு கொடுத்த கட்டளையாகும். "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து," (மத்தேயு28:19) இந்த செய்தி பெரும்பாலும் செவிடரின் காதுகளில் விழுந்தது. நோவாவின் நாட்களில் நடந்தது போல (வசனம் 37), வெள்ளம் வந்து அவர்களை வாரிக்கொண்டு போகும் வரையில்

"அவர்கள் புசித்தார்கள் குடித்தார்கள், பெண் கொண்டார்கள் கொடுத்தார்கள்"(வசனம் 38). அதுபோலவே தற்போதைய ஒழுங்கின் கீழ், மனுஷகுமாரனுடைய நாளிலும் (பிரசன்னம்) நடக்கும். (வசனம் 39) எதிர்காலத்தில் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை காட்டிலும் இன்றைய வாழ்க்கையின் கவலைகள் மிக முக்கியமானதாக தோன்றலாம். ஆயினும், "நீதி வாசமாக இருக்கும் புதிய வானங்களையும், பூமியையும்" விசுவாசத்தின் கண்களை பெற்றவர்கள் காண்கிறார்கள். (2பேதுரு 3:13) இராஜ்யத்தின் இந்த வாக்குறுதிகள், நம் இருதயப்பூர்வமான மகிழ்ச்சியையும் புகழையும் நம்முடைய பரமபிதாவுக்கு ஏறெடுக்க செய்கிறது.

விழித்திருந்து, ஆயத்தமாக இருக்கும்படிக்கு நம்முடைய ஆண்டவர் கூறினார். (வசனம் 42,44)" உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்.","திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள்"(வசனம் 43) தற்போதைய வீட்டு எஜமான், நம்முடைய ஆண்டவர் அல்ல, மாறாக எதிராளியான சாத்தானே இந்த உலகத்தின் அதிபதியாக இருக்கிறான். அவரது வீட்டை அறிந்துக்கொண்டு, அமைதிப்படுத்துவதற்கு பதிலாக, நம்முடைய ஆண்டவரின் பிரசன்னத்தின் மூலமாக ... அவனுடைய வீடு முற்றிலும் அழிந்துவிடும்.

இதற்கு இடையில் தேவனுடைய பிள்ளைகள் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்கிறார்கள். விழித்திருப்பது, என்றால், அடையாளங்களை கவனிப்பதோடு அல்ல, மாறாக நம்முடைய ஆண்டவர் இயேசுவின் சாயலுக்கு ஒப்பாக நம்முடைய குணங்களை வளர்த்துக்கொள்வதையும் பொருள்படுத்தும். நாம் அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றி, நம்முடைய நேரத்தை ஆவிக்குரிய காரியங்களை தேடுவதில் செலவழித்தால், அவர் நம்மிடத்தில் வந்து, நம்முடைய இருதயங்களைத் தேடும்போது, நாம் அவரை எப்போதும் ஏற்றுகொள்ள ஆயத்தமாக இருக்கலாம். எந்த நேரத்திலும் அவரை வரவேற்பதற்கு நாம் தயாராக இருக்கலாம்.

நாம் "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன" (பிலிப்பியர் 3:14) மேலும் தேவனுடைய இராஜ்யத்திற்குள் துரிதமாக பிரவேசிக்கும் ஆயத்தத்தில், "அத்திமரத்தை" கூட்டிசேர்ப்பதற்காக தேவன் செய்யும் சகல ஏற்பாடுகளுக்காகவும் நாம் நன்றியுள்ளவர்களாக இருப்போம். அந்நேரத்தில், தங்கள் இருதயங்கள், இயேசுவை நோக்கும்போது, கோடைகாலத்து கனிகள் முளைக்கும். "திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (மீகா4:2)

| மத்தேயு 24 | மாற்கு 13 | லூக்கா 21 |
|---|---|---|
| 32. அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக் கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர் விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்.<br>33. அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்.<br>34. இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே இந்தச் சந்ததி ஒழிந்து போகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.<br>35. வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை<br>36. அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான் பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள் | 28. அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக் கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர் விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்.<br>29. அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்.<br>30. இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே இந்தச் சந்ததி ஒழிந்து போகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.<br>31. வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை.<br>32. அந்த நாளையும் அந்த | 29. அன்றியும் அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார்: அத்திமரத்தையும் மற்றெல்லா மரங்களையும் பாருங்கள்.<br>30. அவைகள் துளிர்க்கிறதை நீங்கள் காணும்போது வசந்தகாலம் சமீபமாயிற்றென்று அறிகிறீர்கள்.<br>31. அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும் போது, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறியுங்கள்.<br>32. இவையெல்லாம் சம்பவிக்குமுன் இந்தச் சந்ததி ஒழிந்துப் போகாதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.<br>33. வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை. |

| மத்தேயு 24 | மாற்கு 13 | லூக்கா 21 |
|---|---|---|
| 37. நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷக் குமாரன் வரும் காலத்திலும் நடக்கும்<br>38. எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண்கொடுத்தும்,<br>39. ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள் அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்<br>40. அப்பொழுது இரண்டுபேர் வயலில் இருப்பார்கள் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள்.<br>41. இரண்டு ஸ்திரீகள் ஏந்திரம் அரைத்துக்கொண்டிருப்பார்கள் ஒருத்தி ஏற்றுக்கொள்ளப் படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள்.<br>42. உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக் கிறபடியினால் விழித்திருங்கள்.<br>43. திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள்.<br>44. நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார் ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள். | நாழிகையையும் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்.<br>33. அக்காலத்தை நீங்கள் அறியாத படியால் எச்சரிக்கையா யிருங்கள், விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்.<br>34. ஒரு மனுஷன் தன் வீட்டைவிட்டு, புறத்தேசத்துக்குப் பிரயாணம் போக எத்தனிக்கும் போது, தன் ஊழியக்காரருக்கு அதிகாரங் கொடுத்து, அவனவனுக்குத் தன் தன் வேலையையும் நியமித்து, விழித்திருக்கும் படிக்குக் காவல் காக்கிறவனுக்குக் கற்பிப்பான்.<br>35. அப்படியே நீங்களும் விழித் திருங்கள்; ஏனெனில், வீட்டு எஜமான் சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல்கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள்.<br>36. நீங்கள் நினையாத வேளையில் அவன் வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடி யாதபடிக்கு விழித்திருங்கள். | 34. உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலை களினாலும் பாரமடையாத படிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கை யாயிருங்கள். |

மத் 24:45-51

# விசுவாசம் மற்றும் விவேகமுள்ள ஊழியக்காரன்



"ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்?" (மத்தேயு *24:45*)

***James Parkinson***

"ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்?" (மத்தேயு *24:45*)

"உண்மையும் விவேகமுள்ள ஊழியக்காரன்" ஒரு தனி கிறிஸ்தவரா அல்லது கிறிஸ்தவர்களின் குழுவா என்ற கேள்விக்கு மத்தேயு 24 மட்டுமே எளிதில் பதில் அளிக்க முடியாது, ஆனால் லூக்கா12 இதை விரிவாக விளக்குகிறது.

இயேசு தம்முடைய ஊழியத்தில் முக்கியமான போதனைகளை மீண்டும் பலமுறை கூறுவார் என்று நாம் எதிர்பார்க்கலாம். உண்மையும் விவேகமுள்ள ஊழியக்காரனைப் பற்றி இயேசு பேசின முதல் முறையை லூக்கா நமக்கு தந்திருக்கலாம், அதேவேளையில், மத்தேயு தலைப்பின் கீழ் எழுதினார். மேலும், அதைப் பற்றி இயேசு கடைசியாக பேசியதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"உண்மையும் விவேகமுள்ள ஊழியக்காரன்" மற்றும் "அந்த பொல்லாத ஊழியக்காரன்" பற்றிய விவரங்களோடு மத்தேயு24ம் அதிகாரம் முடிவுபெறுகிறது." மனுஷகுமாரனுடைய வருகை" (24:44) மற்றும் "மணவாளனை சந்திக்க அவருக்கு எதிர் கொண்டுபோகும் பத்து கன்னிகைகள்" (25:1)இவைகளுக்கு இடையில் காணப்படும் வெளிப்படையான காலம், சுவிசேஷ யுகத்தின் "கடைசி நாளில்" எங்கோ இடம் பெறுகிறது. இந்த இரண்டு ஊழியக்காரர்களும் இரண்டு தனி நபர்களா அல்லது இரண்டு குழுக்களா என்பதை குறித்த மத்தேயுவின் கூற்று தெளிவாக இல்லை.

லூக்கா 12:35-48 வசனங்கள் தெளிவாக விவரிக்கிறது. மீண்டும், "மனுஷர் தங்களுடைய ஆண்டவர் கலியாண விருந்திலிருந்து எப்போது திரும்புவார் என்று எதிர்ப்பார்க்கும்" அந்த காலப் பகுதியாகும். ஆனால் ஊழியக்காரன் எஜமானனுக்கு ஊழியம் செய்யக்கூடிய வழக்கத்திற்கு மாறாக, கிறிஸ்து அவருடைய இரண்டாம் பிரசன்னத்திலே, அவருடைய ஊழியக்காரர்களுக்கு ஊழியம் செய்கிறார். அதற்குபின் பேதுருவின் கேள்விக்கு பிறகு, உண்மையும் விவேகமுள்ள ஊழியக்காரனைப் பற்றி இயேசு பேசினார். அதை தொடர்ந்து பொல்லாத ஊழியக்காரனைப் பற்றியும் விவரித்தார். இறுதியாக, சரி எது என்பதை அறிந்து, தவறு செய்த ஒரு ஊழியக்காரனுக்கும், அறியாமையில் தவறு செய்த ஊழியக்காரனுக்கும் உள்ள ஒரு தெளிவான வித்தியாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இருவரும் தண்டிக்கப்படுவார்கள், ஆனால் சமமாக அல்ல.

லூக்கா, ஊழியக்காரர்களை (பன்மை), ஊழியக்காரர்(ஒருமை) இடமிருந்து வேறுப்படுத்தி காட்டுகிறார். எஜமான் ஊழியக்காரர்களுக்கு ஊழியம் செய்தார், அந்த ஊழியத்தில், அவருடைய உண்மையும் விவேகமுள்ள ஊழியக்காரர்களையும் பயன்படுத்தினார். இவ்வாறு, ஒரு தனி ஊழியக்காரர்களுக்கும், ஒரு தனிப்பட்ட ஊழியக்காரருக்கும் இடையே உள்ள ஒரு வேறுபாடு இங்கு குறிப்பிடப்படுகிறது. (ஒருவேளை இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவளித்தபோது, அதற்கு பன்னிரண்டு பேரைப் பயன்படுத்தினதுபோல இதுவும் இருக்கவேண்டும்)

இரண்டு வெவ்வேறு ஊழியக்காரர்களிடமிருந்து நடைமுறை பாடங்களை பெறலாம். ஆனால் குறிப்பிட்ட சிறப்பியல்புகள் (குணங்கள்) மேலும் அதிகமாக பரிந்துரைக்கலாம்.

### வரலாற்று பொருத்தம் இங்கு சாத்தியமானதா?

தீர்க்கதரிசனம் நிறைவேற, உண்மைகள் பொருந்தவேண்டும். இந்த தீர்க்கதரிசனத்திற்கு ஒரு வரலாற்று ஆதாரம் பொருந்தினால், கிறிஸ்துவின் வருகைக்கு (லூக்கா 12:36) முன்பே அதை அடையாளம் காண முடியாது. ஆனால் அதை அவருடைய இரண்டாம் பிரசன்னத்தின் போது காண்பதற்கு சாத்தியமாக இருக்கவேண்டும்.

விழித்திருக்கும் ஊழியக்காரர்களிடம் ஆண்டவர் வந்து, பின்னர் அவர்களுக்கு உணவளிக்கிறார், எனவே இந்த தீர்க்கதரிசனத்தின் காலம், சுவிசேஷ யுகத்தின் ஏழு நாட்களின், கடைசி நாளின் போதாகும். கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னம் மற்றும் பிரசன்னத்தின் விளைவுகள் பற்றியகாலம் சரியாக அறிவிக்கபடாத

போதிலும், (லூக்கா 12:40) விழித்திருந்த ஊழியக்காரர்கள், 1843 அல்லது 1844 (வில்லியம் மில்லர் ), 1847 (ஜோசப் வுல்ஃ), 1868 (வில்லியம் சி. துர்மேன்), 1873 (நெல்சன் எச். பார்பர் மற்றும் ஜோனாஸ் வென்டெல்) மற்றும் சிலர் மத்தியில் பார்த்துக்கொண்டிருந்தனர். யூதர்கள் பாலஸ்தீனத்திற்கு / இஸ்ரயேலுக்கு திரும்பி வரத் துவங்கும் வரை (அக்டோபர் 1878) கிறிஸ்துவின் பெரோஜியா (பிரசன்னம்) துவங்கி விட்டதற்கு எந்த உறுதியான ஆதாரமும் இருக்கவில்லை. பின்னர் அல்லது சுமார் 1873-1875 க்குள், நீண்ட மந்தநிலை, பால்கன் பயிர (BALKAN CROP HORVEST) அறுவடை மற்றும் ஒட்டோமான் பேரரசிற்கு எதிரான கிறிஸ்தவ கிளர்ச்சி தோல்வியுற்றபோது, யூதர்களின் திரும்பி வருதலுக்குள் நுழைந்தது.

அதிலிருந்து நம்முடைய ஆண்டவர் தம்மை கவனித்துக்கொண்டிருக்கும் ஊழியக்காரர்களுக்கு, ஏற்ற கால உணவை தந்துக்கொண்டிருக்கிறார் என்று ஒருவர் எண்ணலாம்.

அந்த உண்மையும் விவேகமுள்ள ஊழியக்காரன் சார்லஸ் டேஸ் ரசல் என்பவரே. 1872ம் வருடத்திற்குள், அவர் **அனைவருக்குமான** கிறிஸ்துவின் ஈடுபலியையும், உலகத்தின் மறுசீரமைப்பையும் விசுவாசித்து, தேவனைப் பற்றிய குழப்பமான திருத்துவ கொள்கையை நிராகரித்தார். அவர் வயது முதிர்ந்தவராக, 1874 ஆம் ஆண்டில் மறுபடியும் ஞானஸ்நானம் பெற்று, 1876 ல் அலிகெனி குழுவிற்கு (Allegheny group) தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயரானார். 1877ல் இஸ்ரயேல் விரைவாக தேசம் திரும்பும் என்று அவர் எதிர்ப்பார்த்தார். அவர் 1879 ஜூலையில் காவற்கோபுர பத்திரிகையைத் தொடங்கினார். 1886-1904 ஆம் ஆண்டில் ஆறு தொகுப்புகளை "வேதாகமத்தின் ஆய்வுகள்" என்ற நூலை பல டஜன் மொழிகளில் வெளியிட்டார். ஒரு தூய்மையான கிறிஸ்தவ வாழ்க்கையை அவர் வாழ்ந்து வந்தார். அவர் மதுவுக்கு முற்றிலும் விலகினவரும், தன்னை கண்டனம் செய்தவர்களிடம் இரக்கமுள்ளவருமாக இருந்தார். இறுதியாக அவர் 1,200 சபைகளுக்கு தேர்வு செய்யப்பட்ட பாஸ்டராகவும், உலகம் முழுவதிலும் 20,000 ஆதரவாளர்களையும் பெற்றிருந்தார். உலகெங்கும் உள்ள வேத மாணவர்கள், அறுவடை வேலையில் தங்களை வழி நடத்தும் படிக்கு எங்கும் அவரை தேடிக்கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு, 1870களில் ஏற்கெனவே செயல்பட்டுகொண்டிருந்த அவர், சர்வதேச ரீதியில் வேதாகமத்தின் ஒரு ஒத்திசைவை பரப்பினார். மேலும் உலகளாவிய அளவில் சாட்சியின் வேலைகளுக்கு வழிகாட்டினார்.

ஆயினும், 1916ல் பாஸ்டர் ரசல் இறந்தபோது மற்றொருவர் காவற்கோபுர வாரிய இயக்குநரிடமிருந்து அதிகாரத்தை கைப்பற்றி, கிறிஸ்துவின் திரும்புதல் 1914 வரைக்கும் தாமதிக்கும் என்று கோரினார். அவரை ஆதரிக்காத வேத மாணவர்களை வெளியேற்றினார். தன்னையே அதிகாரத்தின் மையமாக ஏற்படுத்திக் கொண்டு மதுவை முழு சுதந்திரமாக சபைக்குள் அனுமதித்தார். அவரால் வெளியேற்றப்பட்டவர்கள், இப்பொழுது பாபிலோனின் பாவங்களின் பங்கு கொள்ளாத படிக்கு அவளைவிட்டு வெளியே வரும் படிக்கு அவர்களுக்கு அழைப்பு கொடுக்கப்பட்டதாக அவர்கள் முடிவு செய்தனர். அங்கு இருந்தவர்களில் சிலர் அனைத்தையும் நன்கு அறிந்திருந்தார்கள் ஆனால் மற்றவர்கள் அறிந்திருக்கவில்லை, ஆயினும் அனைவரும் தேவனுடைய ஆவியின் சுதந்திரத்தை இழந்தனர். (2கொரிந்தியர் 3:17)

இவ்வாறு, உண்மையும், விவேகமும் உள்ள ஊழியக்காரரைப் பற்றிய தீர்க்கதரிசனத்தின் இந்த நிறைவேற்றத்தை ஒருவர் காணலாம். பாஸ்டர் டேஸ் ரசல் இல்லை என்றால் வேறு யாராக இருக்க முடியும் ?

## வேத மாணவர்களுக்கு தனித்துவமான பாஸ்டர் ரசலின் மேற்கோள்கள்

"சத்தியத்தைத் தேடுபவர்கள், தங்கள் பாத்திரங்களில் உள்ள பாரம்பரியமான அழுக்கு தண்ணீரை வெளியே ஊற்றிவிட்டு, தேவனுடைய வார்த்தையாகிய சத்தியம் என்னும் நீரூற்றினாலே நிரப்பவேண்டும். சத்தியத்தை தேடுபவர்களை இந்த நீரூற்றுக்கு வழி நடத்தக் கூடிய வழிகாட்டிகளை தவிர, வேறு எந்த மத போதனைகளையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது."

(SS,Volume 1, page 12).

(வேதாகமத்தின் ஒவ்வொரு அறிக்கையையும் ஒத்திசைக்க வேறு எந்த இறையியல் முறையும் உரிமை கோரவில்லை அல்லது இதுவரை முயற்சிக்கவில்லை, ஆயினும் கூட இந்த கருத்துக்களுக்கு நாங்கள் எதுவும் கோர முடியாது. SS, Volume 1, page 348)

"உலகில் உள்ள வேறு எந்த வகை மக்களையும் விட மதகுருக்கள் பைபிளை விளக்குவது குறைவு. இறையியல் கருத்தரங்குகள் பைபிள் விளக்கத்தை கற்பிக்காமல், பல்வேறு சமயக் கோட்பாடுகளை எவ்வாறு பாதுகாப்பது என்பதையும், விசாரணையை எவ்வாறு மூச்சுத் திணறச் செய்வது என்பதையும், புலனாய்வாளரையே முட்டாள்தனமாக உணர வைப்பது எவ்வாறு என்பதையும் மாணவருக்கு அறிவுறுத்துகின்றன. ("What Pastor Russell Said"[Hundreds of Questions Answered by Pastor Russell Only], page 42. Otherwise, "QB" for Question Book)

"வகுப்பறை தடைகளை உடைப்பது சரியானதாக இருக்கும். அதாவது, இந்த வெவ்வேறு மத வேலிகள், அவற்றில் சில பல நூற்றாண்டுகளாக இருந்தன, ஒரு சில நூற்றாண்டு காலம் மாத்திரம் கிறிஸ்தவ மக்களை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பிரித்தே வைத்திருக்கின்றன. (QB, page 345)

"ஏன் ஒருவர் பெயரளவு சபையை விட்டு வெளியேறி I.B.S.A. இல் சேர வேண்டும். முதலில், நீங்கள் வேறு எங்கும் சேரும் விதத்தில் I.B.S.A. சேர முடியாது. நீங்கள் வெறுமனே தவிர்த்து வெளியே இருக்க முடியாது. அவர்கள் உங்களைப் ஏற்றுக்கொள்ள தேவையில்லை. நீங்கள் சுயாதீனரானவுடன் நீங்கள் ஒரு வேத மாணவராக ஆகிறீர்கள்." (QB, page 349)

"புரூக்ளினில் உள்ள தலைமையகத்தைப் பொறுத்தவரையில், அங்குள்ள வேலைகளுடன் எனது சொந்த அடையாளத்தைப் பொறுத்தவரை, நான் சொல்கிறேன் :எல்லாம் எனது மேற்பார்வையில் உள்ளது. எனது மனசாட்சிக்கு மாறாக எதுவும் அங்கிருந்து வெளிப்படுவதில்லை. ஆனால் நீங்கள் உங்கள் மனசாட்சியைப் பயன்படுத்த வேண்டும். "( QB, page 350)

"இன்னொரு விஷயம் யாதெனில்... யாத்ரீகர்களும் பிற சகோதரர்களும் "சகோதரர் ரசலை" எந்த அளவிற்கு பிரசங்கிக்க வேண்டும்? என்று கேட்கிறார்கள். தேவை இல்லை என்று நான் சொல்கிறேன், முற்றிலும் தேவை இல்லை. அன்பார்ந்த நண்பர்களே, நீங்கள் பிரசங்கிக்க ஏராளமானவை உள்ளன, நாங்கள் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம், என்று அப்போஸ்தலன் கூறுகிறார். " (QB, page 77)

"எந்தவொரு பணமும் எப்போதும் கோரப்படவில்லை என்றாலும், பயன்படுத்தப்பட்ட பணம் அனைத்தும் நன்கொடையாக வழங்கப்பட்டதே, மேலும் ஒரு விதியாக ஊழியத்திற்காகக் கொடுப்பவர்கள் மிகவும் செல்வந்தர்களும் அல்ல. (QB, page 349)

"இந்த வகுப்புகள் அனைத்தும் சுயாதீனமானவை. கிறிஸ்தவர்கள் உலகின் எல்லா பகுதிகளிலும் இருப்பதால், அவர்கள் அனுதாபம் மற்றும் சகோதரத்துவத்தின் தார்மீக உறவைக் கொண்டுள்ளனர். கிறிஸ்து ஒருவர் மட்டுமே உங்கள் எஜமான்." (QB, page 346)

"நீங்கள் ஒரு முறை உங்கள் சொந்த விருப்பத்தை விற்றுவிட்டீர்கள், தேவனுடையத் திட்டம் அக்டோபர், 1914, அல்லது 1940 என்று உங்களால் எதுவும் சொல்ல முடியாது. இது உங்களுக்கான விஷயம் இல்லை. அனைத்தையும் தேவனுக்கே கொடுத்தீர்கள். அது அவருடையது. (QB,page 99)

"I.B.S.A பாபிலோனின் ஒரு பகுதி என்று காட்ட முடிந்தால், நாம் அனைவரும் அதிலிருந்து வேளியேற வேண்டும். நாம் அனைவரும் ஒரே பக்கத்தில் வெளியேறினால், நாம் எங்கே இருப்போம்? அனைவரும் ஒரே பக்கத்தில் வெளியேறினால் நாம் உள்ளாக நெருக்கமாக இருப்போம் என்று நினைக்கிறேன். (QB,page 351)

| மத்தேயு 24 | மாற்கு 13 | லூக்கா 12 |
|---|---|---|
| 31. வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற் கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்.<br>32. அத்தி மரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்.<br>33. அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் | பதிவு செய்யப்படவில்லை | 36. தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள்.<br>37. எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். அவர் அவரைக் கட்டிக் கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச் செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ் செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்.<br>38. அவர் இரண்டாம் ஜாத்திலாவது மூன்றாம் ஜாமத்திலாவது வந்து, அவர்கள் அப்படியே இருக்கக் கண்டால் அவ்வவூழியக்காரர் பாக்கியவான்கள்.<br>39. திருடன் இன்ன நேரத்தில் வருவான் வீட்டெஜமானுக்குத் |

| மத்தேயு 24 | மாற்கு 13 | லூக்கா 12 |
|---|---|---|
| சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்.<br>34. இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே இந்தச் சந்ததி ஒழிந்து போகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். | பதிவு செய்யப்படவில்லை | தெரிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டான் என்று அறிந்திருக்கிறீர்கள்.<br>40. அந்தப்படியே நீங்கள் நினையாத நெரத்தில் மனுஷக்குமாரன் வருவார், ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்றார்.<br>41. அப்பெழுது பேதுரு அவரை நோக்கி நோக்கி ஆண்டவரே இந்த உவமையை எங்களுக்கு மாத்திரம் சொல்லுகிறீரோ, எல்லோருக்கும் சொல்லுகிறீரோ என்று கேட்டான்<br>42. அதற்குக் கர்த்தர்: பணிவிடைக் கராருக்குத் தகுதியான காலத்திலே படி கொடுக்கும்படி எஜமான் அவர்கள் மேல் அதிகாரியாக வைக்கத்தக்க உண்மையும் விவெகமுள்ள விசாரனைக்காரன் யாவன்.<br>43. எஜமான் வரும்போது அப்படியே செய்கிறவனாய்க் காணப்படுகிற ஊழியக்காரன் பாக்கியவான்<br>44. தனக்குள்ளே தெல்லாவற்றின் மேலும் அவனை விசாரனைக் காரனாக வைப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் செல்லுகிறேன்.<br>45. அந்த ஊழியக்காரனோ என் எஜமான் வா நாள் செல்லும் என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு வேலைக் காரரையும் வேலைக் காரிகளையும் அடிக்கவும், புசித்துக் குடித்து வெறிக்கவும் தலைப் பட்டால்<br>46. அவன் நினையாத நாளிலும், அறியாத நேரத்திலும், அந்த ஊழியக்காரனுடைய எஜமான் வந்து, உண்மையில்லாதவர் களோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான்.<br>47. என் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயி ராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான்<br>48. அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ, சில அடிகள் அடிக்கப்படுவான். எவனிடத்தில் அதிகங்கொடுக்கப் படுகிறதோ, அவனிடத்தல் அதிகங் கேட்கப்படும். மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய் கேட்பார்கள் |

**இவைகளை நீங்கள் அறிந்திருந்தால்...**

# மத்தேயு 24 ஆம் அதிகாரத்தில் உள்ள செயல்முறைப் பாடங்கள்



***Timothy Thomassen***

"தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்." (2தீமோத்தேயு*1:7*)

நம்முடைய ஆண்டவரின் இரண்டாம் வருகையைப் பற்றி பல தீர்க்கதரிசனமான கண்ணோட்டங்கள் மத்தேயு 24ம் அதிகாரத்தில் உள்ளது. பல ஆண்டுகளாக வேதாகம அறிஞர்கள் இந்த முக்கியமான தீர்க்கதரிசனத்தை ஆய்வு செய்து விவாதித்தனர், சில நேரங்களில், வெவ்வேறு முடிவுகளுக்கு வருகிறார்கள். ஆயினும், அதற்குள் செயல் முறை பாடங்களும் உள்ளன. சில பாடங்கள் இங்கு பரிந்துரைக்கப்படுகிறது.

"பின்பு, அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள்.

"(மத்தேயு 24:3) ஆண்டவரின் பிரசன்னத்தின் அடையாளத்தை பற்றியும், சுவிசேஷ யுகத்தின் முடிவைப் பற்றியும் சீஷர்கள் அறிந்துக்கொள்ள அதிகமாக விரும்பினார்கள். அதேபோல, ஒரு கூடுதலான உள்நோக்கை கண்டறிய நேர்மையான மற்றும் விவேகமான விருப்பம் நமக்குள்ளும் இருக்கவேண்டும்.

"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு." (2தீமோத்தேயு 2:15) என்று அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினார்.

தேவனால் எழுதப்பட்ட வார்த்தையை கவனமாகவும் சரியாகவும் கையாளும் போது, அது தேவனுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது." (சங்கீதம் 119:105) சங்கீதக்காரருக்குள் இருக்கும் அதே பக்தியோடு நாமும் தேவனுடைய வார்த்தைகளை கவனிக்க வேண்டும்.

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு இருக்கவேண்டிய விழிப்புணர்வு மற்றும் கவனிப்பு ஆகியவற்றின் விளக்கத்தை ஒரு எடுத்துக்காட்டின் வழியாக கூறினார். "உங்கள் அரைகள் கட்டப்பட்டதாகவும், உங்கள் விளக்குகள் எரிகிறதாகவும், தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள்." (லூக்கா 12:35-36) என்று கூறினார். தம்முடைய இரண்டாம் வருகைக்காக காத்திருக்கும் அவருடைய சீஷர்களின் குணங்களில் காணப்படவேண்டிய விழிப்புணர்வை இயேசு இங்கு விவரிக்கிறார். பணி செய்வதில் விடாமுயற்சி, எஜமானனுக்காக உள்ள ஆர்வத்தின் மேல் விழிப்புணர்வு, திரும்பி வருவேன் என்ற அவரது வாக்குத்தத்தத்தின்மேல் விசுவாசம் மற்றும் அந்த நிகழ்வுக்காக எதிர்ப்பார்ப்பு மற்றும் முறையான ஊழியத்திற்கு உதவி அல்லது தூண்டுதலாக பணிச் செய்யக்கூடியதற்கான பாடங்கள் இங்கு உண்டு.

"இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்;" (மத்தேயு 24:4) என்று இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கட்டளையிட்டார். வேதாகமத்தில் கற்பிக்கப்பட்டிருக்கும் தெளிவான போதனைகளை கற்பிக்காத பொய்யான ஆசிரியர்களிடம் இருந்து நாம் பாதுகாப்பாக இருக்கவேண்டும். தேவனுடைய வார்த்தையில் உள்ள சத்தியத்திற்கு பதிலாக, புதிய வெளிப்பாட்டை தேவனிடமிருந்து கொண்டுவருவதாக நடிக்கக்கூடிய எந்த மனுஷனிடமும் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

எபேசுவிலிருந்த மூப்பர்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் கொடுத்த அறிவுரை, இன்று நமக்கும் பொருத்தமாக உள்ளது : "எல்லாருடைய இரத்தப் பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன். ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கை

யாயிருங்கள். நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன" (அப்போஸ்தலர் 20:27-30) ஒழுக்கம், சோதனை மற்றும் தேவனுடைய சபையாக தங்களை இறுதியாக நிரூபிப்பதற்கும், இந்த எதிர்மறையான தார்க்க்ங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டியது மிக அவசியம். இவைகளை ஜெயிப்பவருக்கே மிக பெரிய பரிசு வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளது. நாம் கிறிஸ்துவோடு ஆளுகை செய்வதற்கு, தேவன் மேலும் அவருடைய வார்த்தையிலும் உள்ள விசுவாசத்திலும், சத்தியத்திற்கான வைராக்கியத்திலும் உள்ள அதே பரிட்சைகளில் சோதிக்கப்பட்டு, நிந்தனை மற்றும் துன்புறுத்தலில் மரணபரியந்தம் நீடிய பொறுமையோடு சகித்து, குறித்த காலத்தில் தேவன் அவருடைய சபையை விடுவித்து, உயர்த்தும் வல்லமையின் மேல் அசையாத நம்பிக்கை கொண்டவர்களாக நம்முடைய தகுதியை நிரூபித்து காட்டவேண்டும்.

"யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது." என்று இயேசு கூறினார். (மத்தேயு 24:6)

போர்கள் மற்றும் போர்களைப் பற்றிய வதந்திகள் நம்முடைய மனதை கவலைப்படுத்த அனுமதிக்காத படிக்கு இயேசு அன்று அவருடைய சீஷர்களை மட்டும் அல்ல, இன்று நமக்கும் அறிவுரை வழங்குகிறார். உண்மை, போர்கள் மற்றும் வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் அனுதாபமுள்ளவர்களாக இருக்கவேண்டும். எனினும், "அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை." (ஏசாயா 2:4,)என்ற காலம் வரும் என்பதை நாம் அறிந்துக் கொள்ளக்கூடிய ஆசீர்வாதத்தை பெற்றிருக்கிறோம். ஆயிர வருட ஆட்சியில் இயேசு சமாதானத்தை ஸ்தாபிக்கும் வரையில், போர்கள் எப்போதும் இருக்கும் என்று இயேசு குறிப்பிடுகிறார். போர் பொதுவானதாக இருக்கும். எப்படியிருந்தாலும் நம்முடைய நோக்கம் ஒன்று தான். உலகெங்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் இந்த ஊழியத்தை, முடிவு காலத்திற்கான நிச்சயமான அறிகுறி என்று இயேசு கூறினார்.

"ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்." (மத்தேயு24:14) இது சுவிசேஷ யுகம் முழுவதிலும் பரிசுத்தவான்களின் ஊழியத்தை வெளிப்படுத்துகிறது. தற்போதைய அறுவடை அல்லது முடிவு காலத்தில், நற்செய்தியை பிரசங்கிக்கக்கூடிய நம்முடைய ஊழியத்தை இன்னும் தொடர்ந்து செய்யவேண்டும். "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன். என்றார்." (யோவான 16:33 ) என்று இயேசு கூறினார். கர்த்தருடைய காரியங்களைப் பற்றி சரியான கண்ணோட்டத்தை நாம் காண கற்றுக்கொண்டு, அவரை விசுவாசிக்க கற்றுக்கொண்டு, அவருடைய வாக்குத்தத்தங்களை நம்பி, அவருடைய பராமரிப்பை கவனிக்க கற்றுக்கொள்ளும்போது, ஒவ்வொரு புயலிலும், துன்பத்திலும், சமாதானத்தையும் அமைதியையும் பெற்றிருப்பது நம்முடைய பாக்கியம். இது மற்றவர்களுக்கு அல்ல, நாம் எவ்வளவு நன்றியுள்ளவர் களாக இருக்கவேண்டும்!

அக்கிரமம் பெருகுவதால் அநேகருடைய அன்பு தணிந்து போகும் என்று மத்தேயு 24:12 ம் வசனம் குறிப்பிடுகிறது. சுவிசேஷ யுகம் முடிவு வரையில் தொடரும் நிலைகளை இது விவரிக்கிறது. அநீதி பொய்யான தொழில்கள், தேவபக்தியின் வேஷம் மற்றும் இன்பத்தின் மேலுள்ள பற்று பெருகும். ஆனால் தவறான வழியில் செல்லும் ஒரு கூட்டத்தோடு செல்வதை விட, தனியாக நடப்பது நல்லது.

தேவன் மீது நம்முடைய அன்பு குளிர்ந்தது, என்பதற்கு அவரை பிரியப்படுத்தும் விருப்பத்தையும், சுவிசேஷத்தின் செய்தியை பரப்புவதற்கான அவருடைய ஊழியத்தின் மேல் நம்முடைய அன்பு குறைந்துபோவதை பொருள்படுத்துகிறது. ஆனால் "முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்" (மத்தேயு 24:13)

ஆகையால் பொறுமையின் தேவை வலியுறுத்தப்படுகிறது. மற்றும் சகிப்புத்தன்மைக்கான சோதனை கடினமான தொன்றாகும். இந்த சுவிசேஷ யுகத்தின் பரிசுக்காக ஓடிக்கொண்டிருக்கும் யாவருக்கும், பந்தையத்தின் முடிவு வரைக்கும் நீடிய பொறுமை தேவைப்படுகிறது.

பொறுமையின் முக்கியத்துவத்தை பல வசனங்கள் வலியுறுத்துகிறது. "அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும் பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்." (ரோமர் 5:3-4)

"நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது." (எபிரெயர் 10:36)

"சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடியசாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காகவேண்டுதல்செய்கிறோம்."(கொலோசேயர் 1:11)

ஒரு முக்கிய ஆய்வுப் பொருள் யாதெனில் விழிப்புணர்வு ஆகும். ஒரு பிரபலமான பாடலில் எழுத்தாளர் குறிப்பிடுவது போல்-

" நாம் கவனித்துக்கொண்டிருக்கிறோம், நாம் காத்துக்கொண்டிருக்கிறோம், அந்த பிரகாசமான, தீர்க்கத்தரிசன நாளுக்காக, அப்போது நிழல்கள், களைப்புற்ற நிழல்கள், பூவுலகிலிருந்து விலகிச் செல்லும், நாம் இந்த காலைப் பொழுதுக்காக எழுகிறோம், மேலும் அவ்வழகான நாளும் விடிகிறது, இந்த காலைப் பொழுதுக்காக நாம் களிகூறுகிறோம். பாருங்கள், அந்த நிழல்கள் களைந்து செல்கின்றன. இதோ, அவர் வந்துள்ளார், பாருங்கள் இராஜா நெருங்கிக் கொண்டிருக்கிறார், சீயோனே, களிகூறு, கர்த்தர் இங்கு வந்துள்ளார். (விடியலின் பாடல்கள் 318, "நாளுக்காக கவனித்துக்கொண்டிருந்ததல், வசனம் 1)


விழிப்புணர்வின் முக்கியத்துவத்தை பல வசனங்கள் வலியுறுத்துகிறது, கூடதலாக: "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்." (மத்தேயு26:41)

விசுவாசத்தினால், நாம் நம்முடைய ஆண்டவராம் போதகரிடம் நெருங்கி வந்து, தேவனுடைய அற்புதமான திட்டத்தில் முழு நம்பிக்கை வைக்கவேண்டும். உண்மையாக விழித்திருக்கும் யாவரும் ஜெபிப்பவர்களாகவும் இருக்கவேண்டும், மேலும் உற்சாகத்துடன் ஜெபிக்கும் யாவரும்விழித்திருக்கவேண்டும்.

முடிவாக, இந்த வார்த்தைகள் நம்முடைய சிந்தையில் தொடர்ந்து இருக்கக்கடவது :"உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்"(மத்தேயு 24:42) காலங்களை குறித்த அடையாளங்களை, தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் கவனிக்கவேண்டும். நம்மையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும், தீர்க்கதரிசன வார்த்தையையும் கவனிக்கவேண்டும். விசுவாசமுள்ளவர்களுக்கு மட்டும் அல்ல முழு மனுக்குலத்திற்கும், நன்மையான காரியங்களை தேவன் ஒதுக்கிவைத்திருப்பதை நாம் அறிந்திருப்பதினால், அவைகளை தீவிரமாகவும், ஆர்வத்துடனும் கவனிக்கவேண்டும். "தேவனுக்கே மகிமை உண்டாவதாக!"

மத்தேயு 25

# மூன்று பரோஷியா உவமைகள்



"அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்." (மத்தேயு *25:1*)

***Timothy Thomassen***

மத்தேயு 24ம் அதிகாரத்திற்கு பின் தொடர்ந்து வரும் மூன்று உவமைகள் கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தம் செய்யும் ஊழியக்காரர்களைப் பற்றியும், அவருடைய பிரசன்னத்தின் முதல் பகுதியில் உள்ள ஊழியக்காரர்களைப் பற்றியும், அவருடைய மகிமை அடைந்த பகுதியில் இந்த உலகத்தைப் பற்றியும் பேசுகிறது.

**புத்தியுள்ள மற்றும் புத்தி இல்லாத கன்னிகைகள்**

இந்த உவமைகளில் முதலாவது, மணவாளனாகிய கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்க்கும் கன்னிகைகளைப் பற்றியது. (25:1-13) இவ்வளவு காலம் செல்லும் என்று ஒருவரும் எதிர்பார்க்கவில்லை (பல நூற்றாண்டுகள்), ஆனால் தங்களை ஆயத்தம் செய்துகொள்ளும்படி சிலருக்கு ஞானம் இருந்தது. தங்களுடைய தீவெட்டிகளிலிருந்து வெளிச்சத்தை தந்த எண்ணை தேவனுடைய பரிசுத்த ஆவியை அடையாளப் படுத்துகிறது, நமக்கும் வெளிச்சத்தை தருகிறது. (1யோவான் 1:5)

எரிந்துபோன திரி அல்லது குறைவான எண்ணையை கொண்ட ஒரு தீவெட்டி, மாறி மாறி புகையையும், வெளிச்சத்தையும் கொடுக்கும். (நாம் சில நேரங்களில் ஒளியை விட அதிக வெப்பதை கொடுக்கக் கூடியவர்களாக இருக்கிறோமா?) திரியை சமமாக கத்தரித்து, எண்ணையால் நிரப்பப்பட்ட தீவெட்டி பிரகாசமாகவும் நிலையாகவும் எரியும். விழித்திருப்பவர்கள் பரிசுத்த ஆவியாகிய எண்ணையை அதிகரிக்கவேண்டும், இல்லையேனில், நாம் புத்தி இல்லாத கன்னிகைகளாக இருப்போம்.

புத்தி இல்லாத கன்னிகைகள் இன்னும் கன்னித்தன்மையுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். ஆயினும் போதுமான அளவு எண்ணை இல்லாததினால், ஒரு முறை கிருபை பெற்றது போல எப்போதும் கிருபை பெறலாம் என்று எண்ணுபவர்களை இவர்கள் சித்தரிக்கலாம். (ஆனால் கலாத்தியர் 5:4ஐ ஒப்பிட்டு பார்க்கவும்) ஆகவே "என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய (பாபிலோன்) பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்" என்று அழைப்பு கொடுக்கப்படும் போது, அவர்கள் அதற்கு செவிக் கொடுப்பதற்கு ஆயத்தமாக இருப்பதில்லை. அவர்களுக்கு எந்த தண்டனையும் விதிக்கப்பட வில்லை, ஆனால்" திருமண விருந்தில்" மணவாளனோடு இருப்பதற்கான சிலாக்கியத்தை இவர்கள் இழந்து விடுகிறார்கள். இந்த புத்தி இல்லாத கன்னிகைகள், வெளிப்படுத்தல் 7:9-17, 19:1-3, 6,ம் வசனங்களில் சொல்லப்பட்ட "திரள் கூட்டத்தாருக்கும்" மற்றும் எசேக்கியேல் 44: 10-14 உள்ள லேவியர்களுக்கும் நன்கு பொருந்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

கிறிஸ்துவின் உடனடியான திரும்புதலை அநேகர் எதிர்ப்பார்த்தார்கள் : முதலாம் நூற்றாண்டில் (யோவான் 21:23), கிபி 1000, 1843, முதலியன., ஆனால் யூதர்கள் இஸ்ரயேலுக்கு எங்கு திரும்பினார்கள், மற்றும் யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத "உபத்திரவ காலத்தில்" எங்கு வருகிறது? (தானியேல் 12:1) ஒவ்வொரு ஏமாற்றத்தின் போதும் சிலர் தங்களுடைய பக்தி வைராக்கியத்தை இழந்தனர். அதேநேரத்தில் மற்றவர்கள் தொடர்ந்து கிறிஸ்துவையும் அவருடைய பலியையும், அவரால் மீட்கப்படக்கூடிய உலகத்திற்கு, வரக்கூடிய இராஜ்யத்தைப் பற்றியும் அறிவித்தனர்.

"இதோ மணவாளன், அவருக்கு எதிர்கொண்டு போக புறப்புடுங்கள்" என்ற அழைப்பு மணவாளன் திரும்பி வருவார் என்ற எதிர்ப்பார்ப்பை காட்டுகிறது. (25:6,10) இவ்வாறு, கிறிஸ்தவ சரித்திரத்தில் இதன் நிறைவேற்றத்தை நன்கு கவனிக்கலாம். ஏற்கனவே 1820 களில் இங்கிலாந்தில் ஒரு "இரகசிய பிரசன்னம்" என்ற இயக்கம் இருந்தது, இது 1830களில் அமெரிக்காவிற்கும் பரவியது. எதிர்பார்க்கப்பட்ட 1843 மற்றும் 1844ல் குறிப்பிடத்தக்க எதுவும் நடக்காத போது சிலர் சோர்வடைந்தார்கள்,

மற்றவர்கள் கிறிஸ்து எப்போது வருவார் என்பதை அறியாதவர்களாக தொடர்ந்து செயல்பட்டு கொண்டிருந்தனர். அக்டோபர் 1878 வரை யூதர்கள் யூதர்கள் ஆர்வத்துடன் தேசம் திரும்புவதற்கு தொடங்கவில்லை. (ஏற்கனவே "உம்முடைய ஜனத்தின் குமாரர்கள்"43% - உலகத்தில் உள்ள யூதர்கள் -- இப்போது திரும்பியிருக்கிறார்கள்.) முதலாம் உலகப் போர் வரை (1914 -1918) "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலத்தை" நாம் தெளிவாகக் காணவில்லை, இது பொருளாதார மந்த நிலை, அதிக போர்கள் மற்றும் புரட்சிகள் மூலம் தொடர்கிறது.

வேதாகமம் நமக்கு பல கால தீர்க்கதரிசனங்களை தருகிறது. ஆகையால், அவைகளை புரிந்துக்கொள்ள முயற்சிப்பது தவறல்ல. இருப்பினும், ஆதாரங்களை அல்லது சான்றுகளை "கவனிப்பதற்கும்", அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையை தொடரவும் நாம் எச்சரிக்கப்படுகிறோம்.

**பாடம்** - "பரோஷியாவைப் " பற்றிய அறிவை பயனுள்ளதாக்க, நல்ல குணலட்சனங்களை உருவாக்க வேண்டும்.

**தாலந்துகள்**

தாலந்துகளை பற்றிய உவமை, இன்னொரு நாட்டிற்கு (பரலோகம்) செல்லும் ஒரு மனிதனைப் பற்றியது (இயேசுவை குறிக்கும்) வியாபாரம் செய்வதற்கு, அவர் தம்முடைய ஊழியக்காரர்களுக்கு பணம் என்னும் பல்வேறு தாலந்துகளை கொடுத்தார். இரண்டு ஊழியக்காரர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட தாலந்துகளை இரட்டிப்பாக்கினார்கள், ஆனால் மூன்றாவது ஊழியக்காரன் பயந்ததினால், அதை பத்திரமாக தன்னிடம் வைத்துக்கொண்டான். வெகு காலத்திற்கு பின் ஆண்டவர் திரும்பி வந்து, தாலந்துகளை இரட்டிப்பாக் கினவர்களுக்கு வெகுமதி வழங்கினார், ஆனால் பிரயோஜனமற்ற ஊழியக்காரன் வைய்யப்பட்டு வெளியேற்றப் பட்டான்.

பிரயோஜனமற்ற ஊழியக்காரன் தன்னுடைய தாலந்தை காசுக்காரிடம் கொடுத்து, சிறிதளவு வட்டியையாவது பெற்றிருக்கலாம். கிறிஸ்தவர்களுக்கு பொறுத்தினால், நாம் தேவனுக்கு நேரடியாக ஊழியம் செய்வதற்கு விருப்பம் இல்லை என்றால், (அல்லது முடியவில்லை என்றால்) விரும்பி ஊழியம் செய்பவர்களுக்கு உதவி செய்வதற்கு முயற்சிக்கவேண்டும். நம்முடைய திறன்களை உலக நோக்கங்களில் புதைப்பதற்கு மட்டும் அல்ல அமைப்புகளை கட்டியெழுப்பவும், தேவையான சடங்குகளை நடத்துவதற்கும் நாம் சோதிக்கப்படலாம்.

"அழுகையும் பற்கடிப்பும்" என்ற வார்த்தைகள் புதிய ஏற்பாட்டில் (மத்தேயுவில் 6 முறைகள்) ஏழு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது பொதுவாக சுவிசேஷ யுகத்தின் முடிவில் உள்ள விஷயங்களைப் பற்றி கூறுகிறது. கோபமாக பற்களை கடித்து மற்றவர்களை அழ வைக்கக் கூடியவர்களைப் பற்றி கூறுவதாக தோன்றுகிறது. இந்த வார்த்தைகள் அர்மகெதோன் போர் அல்லது நாம் வாழக்கூடிய "உபத்திரவ காலத்திற்குரியதாக" இருந்தாலும் சரி, இதன் முடிவு வாசகர்களிடம் விடப்படுகிறது. ஆயினும், "அழுகையும் பற்கடிப்பும்", "இரண்டாம் மரணத்திற்குரிய" நிலையாக தெளிவாக விவரிக்கப்படுவதில்லை.

**பாடம்** - நம்முடைய ஆண்டவருக்காக நம்மால் முடிந்ததைச் செய்யவேண்டும், அல்லது அவைகளை செய்யக்கூடிய மற்றவர்களுக்கு உதவியாவது செய்ய வேண்டும்.

**செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகள்**

"அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய் .. வரும்போது" என்று செம்மறியாடு மற்றும் வெள்ளாட்டின் உவமை துவங்குகிறது. (இது போன்ற இதே சொற்கள், சுவிசேஷங்களில் ஏழு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இது ஜாதிகளுக்கு விரோதமாகக் கோபங்கொள்வதற்காக அல்ல, மாறாக உயிர்த்தெழுந்த இராஜ்யத்தில் அவருடைய ஆளுகையைப் பற்றி குறிப்பிடுகிறார். "சகல பரிசுத்த தூதர்களோடும் கூட" என்பது மகிமை அடைந்த முழு சபையை இதை குறிக்கலாம்) உலகம் தான் சொல்வதன் மூலம் தீர்மானிக்கப்படாது, ஆனால் அவர்கள் மற்றவர்களுக்காக என்ன செய்ய கற்றுக்கொள்கிறார்கள் என்பதன் மூலம் தீர்ப்படையும். நீதியையும் இரக்கத்தையும் கற்றுக்கொள்ளும் யாவருக்கும், இந்த பூமியில் நித்திய ஜீவன், பரிசாக வழங்கப்படும்.

சுயநலமாக இருப்பவர்களுக்கான தண்டனை, அவர்கள் எவ்வளவு குறைவாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு "நித்திய அக்கினி " அல்லது "நித்தியமான தண்டனை" வழங்கப்படும். (25:41, 46) இது "அக்கினி கடல்" என்று வெளிப்படுத்தல் (19:20, 20:10,14,15, 21:8) அடையாளமாக சொல்லப்படுகிறது. இது "இரண்டாம்

மரணம்" என்று இரண்டு முறை அடையாளம் காண்பிக்கப் படுகிறது. இதற்கு கெஹன்னா (*Gehenna*) மற்றொரு வார்த்தை. இது பன்னிரெண்டு முறை பயன்படுத்தப் பட்டுள்ளது. அதில் பத்து முறை சுவிசேஷ யுக சபைக்கும், இரண்டு முறை பரிசேயர்களுக்கும் (மத்தேயு 25:15, 33) எச்சரிப்பாக சொல்லப்பட்டது. (சதுசேயர்கள் உயிர்த் தெழுதலை விசுவாசிக்காததினால், இரண்டாம் மரணத்தை பற்றி புரிந்துக்கொள்ளவும் முடியாது. ஆகையால்

அவர்களுக்கு இரண்டாம் மரணத்தை ஒரு எச்சரிப்பாக பயன்படுத்தப்படவில்லை. "இரண்டாம் மரணம்" என்பது முற்றிலுமான அழிவு, நிச்சயமாக இது நித்தியமான ஒரு தண்டனையாகும். அதை "நித்தியமான உபத்திரவம்" என்று மறுபரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இல்லை.)

யாராவது இறந்தபோது, முடிந்தவரை அவர் ஒரு நினைவுச்சின்னத்தில் (நிமியோன்), (எபிரெய கியூபருக்கு சமமான), குறிக்கப்பட்ட கல்லறை அல்லது கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார். (ஜே. எச், தயர்நிமியோனை "எந்த வொரு நபரின் அல்லது பொருளின் நினைவைப் பாதுகாக்க அல்லது நினைவுபடுத்துவதற்கான எந்த வொரு புலப்படும் பொருளாகவும், ஒரு நினைவு, நினைவுச் சின்னம்.. குறிப்பாக ஒரு கல்லறை நினைவுச் சின்னம்.... லூக்கா 11:47" என்று வரையறுக்கிறார். யெகோவாவின் சாட்சி அமைப்பு இதை "நினைவு கல்லறை" என்று மொழிபெயர்த்ததில் தவறவில்லை. ஆர், வி, ஏ. எஸ். வி RV, ASV மற்றும் பலர் இதை "கல்லறை" என்று மொழிபெயர்க் கிறார்கள்.)

ஒரு மனுஷன் மிகவும் மோசமாக இருந்திருந்தால், ஜனங்கள் அவனை நினைவில் வைத்துக்கொள்ள விரும்பவில்லை என்றால், அவனுடைய சடலத்தை இன்னோம் பள்ளத்தாக்கில் தூக்கி எறிந்துவிடுவார்கள், அவனைப் பற்றிய எந்த ஆதாரமும் இல்லாமல் அங்கு அக்கினியும் புழுக்களும் அவனை அழித்து விடும். (மாற்கு 9:42-48) எனவே, கெஹென்னா என்ற சொல் இரண்டாம் மரணத்தை அடையாளப்படுத்துவதற்கு பயன்படுத்தப் பட்டது - முற்றிலுமான அழிவு.

செம்மறி ஆடுகளையும், வெள்ளாடுகளையும் விரட்டும் போதெல்லாம், ஒரு ஒற்றை வெள்ளாடு முதலில் சென்று வழிக்காட்டும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இவ்வாறாக, கிறிஸ்துவின் ஆயிர வருட முடிவில் சாத்தான் கட்டவிழ்க்கப்படும் போது, "கோகு மாகோகு" ஆகிய துன்மார்க்கமானவர்கள் பலராக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. "ஜாதிகளே" சீர்திருந்தி, விசுவாசிப்பார்கள், இவர்களே "கடற்கறை மணலை" போலிருப்பார்கள். இவர்கள் தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களை நினைவுகூருவார்கள். "நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்த படியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என் பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (வெளிப்படுத்தல் 20:8, ஆதியாகமம் 22:17-18)

**பாடம்** - கிரியை இல்லாத விசுவாசம் செத்தது - மேலும் கிறிஸ்துவின் இராஜ்யத்திலும் அப்படியே இருக்கும். மேலும் உள்ள பாடங்களை வாசகருக்கு ஒரு பயிற்சியாக விடப்படுகிறது.

# கடன் மற்றும் புள்ளி விவரங்கள்



"சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவராலே இது தரிசனப் பள்ளத்தாக்கிலே அமளியும், மிதியுண்குதலும், கலக்கமுமுள்ள நாளாயிருக்கிறது; இது அலங்கத்தைத் தகர்த்து, பர்வதத்துக்கு நேரே ஆர்ப்பரிக்கும் நாளாயிருக்கிறது." (ஏசாயா 22:5)

***Erwin Kalinski***

1835 ஆம் ஆண்டு, ஜனவரி 8ம் தேதி, வாஷிங்டனில் உள்ள அரசியல்வாதிகள் ஒன்று கூடி, அப்போதைய ஜனாதிபதி ஆண்ட்டு ஜாக்சன் சாதித்ததைக் கொண்டாடினர். அங்கிருந்த ஒரு சபை அதிகாரி ஒரு பெரிய அறிவிப்பை விடுக்க எழுந்தார். "நண்பர்களே நம் தேசத்தின் கடன் செலுத்தப்பட்டுள்ளது" யு.எஸ் வரலாற்றில் நாடு கடன் இல்லாத நிலையில் இருந்தது இதுவே முதல் முறை ஆகும். இது சரியாக ஒரு வருடம் நீடித்தது.

கடந்த பிப்ரவரியில் யு.எஸ் யின் தேசிய கடன் 22 டிரில்லியன் டாலர்களை எட்டியது என்று கருவூலத்துறை வெளியிட்ட புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அந்த கடனுக்கான வருடாந்திர வட்டி, அடுத்த பத்து ஆண்டுகளில் 1914 பில்லியன் டாலராக உயர்ந்து விடும். இந்த நிதி ஆண்டில் அது 389 பில்லியன் டாலராக உள்ளது. அடுத்த பத்தாம் ஆண்டில் மொத்தமாக அது 7 டிரில்லியன் டாலராக உயர்ந்துவிடும் என்று காங்கிரஸின் பட்ஜெட் அலுவலகம் (CBO) தெரிவிக்கின்றது. அந்த நிதிகளை திருப்பி செலுத்துவதற்கு அரசாங்கம் வரியை மட்டுமே நம்பியிருக்க வேண்டும், ஏனெனில் அது பெற்றிருப்பதை விட இன்னும் அதிக வட்டி செலுத்த வேண்டி இருக்கும். அரசாங்கத்தால் வழங்கப்படும் எல்லா திட்டங்களுக்கான நிதியும், வட்டியும் வரி வருவாயினரால் வரும் வருமானம் மூலம் போதுமானதாக இல்லையெனில் கூடுதல் கடன் பெறுவது தேவையான ஒன்றாகிவிடும். அப்படியென்றால் இன்னும் அதிக வட்டி பணம் செலுத்த வேண்டி வரும். தற்போதைய கடனே மிகவும் விலையுயர்ந்ததாக இருக்கும் சூழ்நிலையில் இன்னும் எதிர் காலத்தில் அதன் வட்டி விகிதங்கள் இன்னும் உயரும்.

மிதமான பழமைவாய்ந்த அமைப்பான, பொருளாதார கல்விக்கான அறக்கட்டளை (Foundation for Economic Education- FEE) உண்மை அறிக்கை வெளியிடுவதில் உயர்ந்த மதிப்பீடு பெற்ற ஒரு நிறுவனம், மத்திய அரசாங்கத்தின் செலவுகளான மருத்துவம், பாதுகாப்பிற்கான செலவுகள் மற்றும் சமூக பாதுகாப்பிற்கான செலவுகள், இவற்றை விட கடனிற்காக வட்டி செலுத்துவது மிகுதியாக இருக்கும் என்று அந்த நிறுவனம் கூறுகிறது. எதிர் கால நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக, மந்த நிலை இல்லாமல் ஒரு நீடித்த பொருளாதார வளர்ச்சி நமக்கு தேவைப்படும் என்று (FEE) கூறுகிறது. டாட் -காம் குமிழின் சரிவுக்கு முன்னர், 1990களின் முற்பகுதியிலிருந்து 2000களின் முற்பகுதி வரை மந்தநிலை இல்லாத மிக நீண்ட நவீன காலம் நிகழ்ந்ததால், அந்த சூழ்நிலை முதன்மையானதாக திகழ்கிறது.

எவ்வாறாயினும், ஒரு கூடுதல் சிக்கல் என்னவென்றால், நிலையான பொருளாதரா வளர்ச்சி இருந்தாலும் அரசாங்கம் ஒவ்வொரு ஆண்டும் அதன் வருடாந்திர வருவாயை விட அதிகமாக நிதியை செலவு செய்கிறது. (பற்றாக்குறை செலவு) கடனை அடைப்பதற்காக வாய்ப்பு மிக உயர்ந்த நிலையில் இருக்கும் சமயத்தில் இது நிகழும். உண்மையில், அரசாங்கத்தால் அனைவருக்கும் வழங்கப்படும் சுகாதாரப் பாதுகாப்பு போன்ற புதிய அல்லது மேம்பட்ட திட்டங்களுக்காக கூடுதல் நிதி தேவைப்படும்.

ஏற்கனவே, தொழிலாளர் தொகுப்பில் ஏற்படும் மாற்றங்கள் ஜனதொகையின் பெருக்கம் மற்றும் திட்ட மேம்பாடுகள் ஆகியவை யு.எஸ் வரவு செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக வளாந்து வரும் உரிமைத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. 1980களில், யு.எஸ் யில் 30 சதவீத குடும்பங்கள் சில வகையான அரசாங்க நன்மைகளைப் பெற்றன, 2016 ஆம் ஆண்டில் (தகவல்கள் கிடைத்த கடைசி ஆண்டு) இது 52 சதவீத வீடுகளாக உயர்த்த துள்ளது. இந்த திட்ட மேம்பாடுகளில் மருத்துவ உதவி, மருத்துவம், சமூக பாதுகாப்பு, வேலையின்மை மற்றும் நலத்திட்டங்கள் போன்ற வற்றால் ஏற்படும் மாற்றங்கள் அடங்கும். தற்போதைய திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட சி.பி.ஓ திட்டங்கள் பதினெட்டு ஆண்டுகளுக்குள், இந்த திட்டங்களுக்காக செலவு அனைத்து அமெரிக்க கூட்டாட்சி வரி வருவாயையும் உறிஞ்சிவிடும் என்பதைக் குறிக்கிறது - கடனுக்கு வட்டி செலுத்துவதற்கோ அல்லது இராணுவத்தை ஆதரிப்பதற்கோ எதையும் விட்டு வைக்காது. விருது பெற்ற பொருளாதார நிபுணர் ஷெர்பாட்ஸ்டின் உருவாக்கிய பொருளாதார சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட ஒரு சூழ்நிலையை இது கொண்டு வரும் வேண்டாம். கணக்கிடும் அந்த நாள் வரும் பொழுது, மந்த நிலையைவிட மோசமான ஒன்றைக் கொண்டு வரக் கூடிய கடினமான முடிவுகளை எடுக்க கட்டாயப்படுத்தும். நிதி

எழுத்தாளர் ஜான் மாலதின் கடந்த நவம்பர் மாதம் ஒரு கட்டுரையில் இவ்வாறு எழுதினார். " அரசாங்கத்தின் கடன் குறித்த காரியங்களை நாம் நம் பகுத்தறிவுக்கு உட்படுத்த வேண்டும்."

**ஒரு உலகளாவிய பிரச்சனை**

Institution of International Finance (IIF) மேற்கொண்ட ஆய்வின்படி உலகின் கடன் குவியல் 244 டிரில்லியன் டாலர் என்ற அளவிற்கு உள்ளது, இது உலகப் பொருளாதாரத்தின் மூன்று மடங்கு அதிகமாகும். 2018 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மொத்த கடன் 65 டிரில்லியனை தாண்டியது. இது 10 வருடங்களுக்கு முன்பு 37 டிரில்லியன் டாலராக இருந்தது. மேலும் இது நன்கு வளர்ந்த சந்தைகளில் மிக வேகமாக உயர்ந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் படி உலகிலேயே அதிக கடன் வாங்குபவர்கள், உலகின் மூன்று பெரிய பொருளாதார நாடான அமெரிக்கா, சீனா மற்றும் ஜப்பான். மீதமுள்ள கடன்களான 72 டிரில்லியன் டாலர் நிதி அல்லாத கார்ப்பரேட் கடனாக பிரிக்கப்பட்டது. இப்பொழுது இது உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 92 சதவீதமாக உள்ளது. 30 சதவீதமாக இருந்த வீட்டு கடன் 46 டிரில்லியன் டாலராக உயர்ந்தது, அதுவும் குறிப்பாக சீனாவில் மற்றும் நிதித்துறை கடன் 60 டிரில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. இது 10 ஆண்டுகளுக்கு முன் இருந்த தொகையை விட 10 சதவீதம் உயர்ந்துள்ளது. பல ஆண்டுகளாக சேவைக்கு பணம் செலுத்தும் முறை ஜெர்மனியில் இருந்தது. இன்னும் 25 ஆண்டுகளுக்குள் 80 சதவீதம் வருமான வரி விகிதங்கள் உயர்த்தப்பட்டு, அந்த நிதி அரசாங்கத்திற்கு வந்தால் மட்டுமே, அரசாங்கத்தால் வழங்கப்படும் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் ஓய்வூதிய முறைகள் ஜனங்களுக்கும் சென்றடையும் என்று Deutsche வங்கி மதிப்பிடுகிறது. ஏனெனில் ஜனங்கள் தொகையின் வயது வரம்பு ஏறிக்கொண்டே இருப்பதால் அரசாங்கத்திற்கு ஆதரவு தரும் தொழிலாளர்கள் குறைந்து கொண்டே போகிறார்கள். (வெளிப்படுத்தல் 16:12 ல் கூறப்படும் அர்மெகேதோனுக்கு முன்பாக நடக்கவிருக்கும் ஆறாவது வாதையாக, கடுமையான உலகளாவிய மனச் சோர்வு அனைத்து அம்சங்களான உலகின் மதம், சமுதாயம், நிதி மற்றும் அரசியல் அமைப்புக்களை கடுமையாக பலவீனப்படுத்தும் என்று பல வேதமாணவர்கள் நம்புகிறார்கள்.)

2009 ஆம் ஆண்டு முதல், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின், 34 உறுப்பு நாடுகளில் பொது சமூக செலவீனம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 21 சதவீதமாக உள்ளது. அக்டோபர் 2016 யின் புதுப்பித்தலின்படி, "சமூக செலவீனம் வரலாற்று ரீதியாக பல ஓ. இ. சி. டி நாடுகளில் உயர்ந்த நிலையில் உள்ளது. பிரான்ஸ் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 31.5 சதவீதத்திற்கு சமமான வருடாந்திர பொது சமூக செலவீனங்களுடன் உலகில் முதலிடம் வகுக்கிறது. வயதானவர்களுக்கு வழங்கும் தொகை மற்றும் சுகாதார செலவுகள், ஓ.இ.சி.டி நாடுகளில், பொது சமூக செலவினங்களில் மூன்றில் இரண்டு பங்காக இருக்கிறது.

உலகின் தற்போதைய நிலைமையை மௌல்டீன் இவ்வாறு பிரதிபலிக்கிறார், "நீடிப்பது மற்றும் நடிப்பது (இது ஒரு பிரச்சனை அல்ல)" அவர் எழுதுகையில், "சீரமைப்பதற்கு தேர்ந்துகொள்ள வேண்டிய பாதையை கணிப்பது மிகவும் கடினம்". நிச்சயமாக சமூகத்தின் பல அம்சங்கள் இந்த பிரச்சினைக்கு பங்களித்தன. இது வெறுமனே நன்மைகளைப் பெறுபவர்களின் எண்ணிக்கை மட்டுமல்ல. அவர்களின் பலர் கடுமையான உலகில் பிழைத்து கொண்டிருக்கிறார்கள். சமுதாயத்தை வடி வமைப்பதற்கான சக்தியும் செலவாக்கும் கொண்ட தலைவர்கள் ஜனங்களுக்கு நிரந்தர நன்மைகள் அளிப்பதில் அதிக ஆர்வம் காண்பிக்க மாட்டார்கள். அது அடுத்த தேர்தல் வரை மட்டுமே நீடிக்கும்.

அனைத்தையும் அசைக்கும் அந்த நாள்

"சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆதலால் பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம" (லூக்கா 21:25,26)

நமக்கு ஒரு மகிமையான எதிர்நோக்கு உண்டு என்று தேவனுடைய வார்த்தை நம்மை உறுதிப்படுத்த வில்லை என்றால், இந்த நிதி உலகம் அதுவும் பொதுவாக இந்த உலகத்தை பார்க்கும் நாம், அழிந்து விடுவோம் என்றே நம்பியிருப்போம். தற்போது நாம் மனித உணர்வுகளின் கோபமான அலைகளால் சூழ்ப்பட்டிருக்கிறோம். இச்சமையம் கிறிஸ்தவர்களக்கு தேவைப்படும் அனைத்து அமைதியையும், தைரியத்தையும் நாம் திரட்ட வேண்டும். வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் போகும் அரசாங்கத்திடம் மக்கள் தங்கள் நம்பிக்கையை இழக்கும் போது இந்த கோப அலைகள் இன்னும் அதிகரிக்கும். சமூக ஒழுங்கின் மிகப்பெரிய கிளர்ச்சி ஏற்படும் பொழுது, நம்முடைய வார்த்தைகளிலும் செயல்களிலும் மிக நிதானமான விழிப்புணர்வு தேவைப்படுகிறது. இந்த உலகில் நாம் சுயாதீனமாக நிற்கும் போது நம் ஆவிக்குரிய வலிமைக்காக நாம் தொடர்ந்து நம் பரலோக தந்தையிடம் தொடர்பு வைத்து கொள்ளவேண்டும். "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்." (1பேதுரு 4:7,8)

பூமியின் இந்த நிலையை நாம் கவனிக்கும் போது முழு தைரியத்துடன் நாம் இருக்க வேண்டும் ஏனெனில் இந்த இருண்ட மேகத்திற்கு பின்னால், மனிதனின் பார்வையில் இருந்து மறைக்கப்பட்ட ஒரு புதிய நாளின் மகிழ்ச்சியான சூரிய உதயம் - மேசியாவின் நாளை, நம்மால் காணமுடிகிறது. இப்படிப்பட்ட மகிமையான விசுவாசத்தில் முதல் உயிர்த்தெழுதலின் வல்லமையில் மகிமையடைந்த திருச்சபையின் விசுவாசத்தில் மற்றும் ஆயிர கால அரசாட்சியில் இந்த உலகத்திற்கு வரப் போகும் ஆசீர்வாதத்தின் விசுவாசத்தில், எல்லா இடங்களிலும் உள்ள தேவ ஜனங்கள் நம் போதகர் நமக்க அறிவுறுத்தியைப் போல, தலையை உயர்த்தி மகிழ்ந்திருப்போம். லூக்கா 21:28

துக்கமும் கலவரமும் நிறைந்த இந்த நீண்ட இரவு, மனித குலத்திற்கு தேவனின் சட்டத்திற்கு கீழ்ப்படியாமையின் விளைவுகளை கற்பிக்கிறது. புதிய நாளில் கிறிஸ்துவும் அவருடைய தெய்வீக வல்லமையும் பூமியெங்கும் நீதியை வலுகட்டாயமாக செயல்படுத்தும்.

மேசியாவின் இராஜ்யதை,"எல்லா ஜாதிகளின் விருப்பம்" என்று ஆகாய் விவரிக்கிறார். (ஆகாய் 2:7) ஆனால் இந்த இராஜ்யம் பெரும் குழப்பத்தில் போது நிறுவப்படும் என்றும் தீர்க்கதரிசனம் கூறப்பட்டுள்ளது. மற்ற வேத வசனங்கள் இக்காலத்தை குறித்து கூறும்பொழுது, இது மிகவும் பிரச்சனைகள் நிறைந்த காலம் என்றும், பெரிய "நடுக்கம்" நிறைந்த காலம் என்றும் கூறுகிறது. (எபிரெயர் 12:26) இது ஒரு பயங்கரமான கலவரப் புயல் வீசும் காலம். உலகம் அதில் முழுமையாக நிரம்பி அதனால் தத்தளிப்பு ஏற்படும் பின்னர், மேசியாவின் புதிய நிர்வாகத்தின் வழிகாட்டுதலின் கீழ், முழு மனுகுலத்திற்கும், ஒரு நல்ல மனதின் ஆவி படிபடியாக வந்து சேரும். மேலும் அவர்கள் விசுவாசமான கீழ்ப்படிதலில் மேசியாவின் இராஜ்யத்திற்கு திரும்புவார்.

ஜெபத்துடன் கூடிய விழிப்புணர்வு மற்றும் நிதானத்துடன் இருக்கும்படி அப்போஸ்தலர் நமக்க அறிவுறுத்துகிறார். இதில் தான் நம் பெலன் அடங்கியிருக்கிறது. நம் போதகர் நம்மை எச்சரிக்கையில், "உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர்மேலும் அது ஒரு கண்ணியைப்போல வரும். ஆகையால் இனிச் சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப் படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார்." (லூக்கா 21:34-36)

"இவற்றிலிருந்து தப்பித்து கொள்ளுங்கள்" என்ற வார்த்தைகளின் முழு முக்கியத்துவமும் நமக்கு தெரியாது, ஆனால் யெகோவா தேவன் ஒருபோதும் நம்மை விட்டு விலக மாட்டார், கைவிட மாட்டார் என்ற எல்லா உணர்வுகளையும் அவை நம்மிடம் கொண்டு வருகின்றன (எபிரெயர் 13:5)நம்முடைய எல்லா துன்பங்களிலும் கர்த்தரின் கரம் இருக்கிறது என்பதை அறிந்தவர்களாய், நாம் விசுவாசத்திலும் பக்தியிலும் நம் பாடங்களை கற்கவேண்டும். நம்முடைய ஒவ்வொரு துன்பமாகிய மேகத்திலும் வெள்ளி கம்பிகள் இருப்பதைக் காணவும், எல்லாவற்றிக்கும் மேலாக தேவனின் வல்லமை நம்மை பாதுகாக்கிறது என்றும் உணர்ந்தவர்கள் இருக்க வேண்டும்.